உமா வாசகம்

ஆரும் புத்தகம்—சிறப்புப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1951
MADRAS

வித்துவான்

இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா

உமாதேவன் கம்பெனி
சென்னை.

TB
031(6)
N51
87086

உமா வாசகம்

ஆறும் புத்தகம்

சிறப்புப் பகுதி

[முதல் பாரத்திற்கு உரியது]

1951௵ ஜூன்௴ 26௳ வெளியிடப்பட்ட புதிய பாடத்
திட்டத்தின்படி எழுதப்பெற்றது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1951
MADRAS

வித்துவான் இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா,
தமிழாசிரியர்,
கிறிஸ்தவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, சென்னை.

உமாதேவன் கம்பெனி
16, செம்புதாஸ் தெரு, சென்னை—1
1951

பதிப்புரிமை] [விலை அணா, 8

98078

The Jupiter Press, Ltd., Madras 1.

முகவுரை

அண்மையில் வெளியிடப்பட்ட அரசாங்கத்தாரின் பாடத் திட்டப்படி பொது, சிறப்பு என இரு வகையாக மொழிகள் பயில்விக்கப்படுகின்றன. 'உமா வாசகம்' என்னும் பெயருடன் வெளிப்போதரும் நூல் வரிசையில் முதல் மூன்று படிவங்களுக்கு சிறப்பு வகைப் பகுதிகள் வெளி வருகின்றன. இவை சிறப்பு வகைக்கு ஏற்ற முறையில் அரசாங்கத்தாரின் பாடத் திட்டத்தையும், அச்சிறப்பு வகைக்கு அளித்துள்ள கால முறையையும் தழுவி எழுதப்பட்டுள்ளன.

ஒவ்வொரு புத்தகமும் பொது வகையைத் தழுவிச் சிறப்பு வகைக்கு ஏற்றவாறு பாடங்களையும், பயிற்சிகளையும் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு புத்தகமும் 'வளர்ச்சி முறை'யைப் பின்பற்றியுள்ளதைப் பாடங்கள் எழுதப்பட்டுள்ள முறையாலும், பயிற்சிகளின் அமைப்பாலும் நன்கறியலாம். நடையும், சொல்லாட்சியும் புத்தகந்தோறும் உயர்ந்து செல்வதும் நோக்கத் தக்கது. மொழிப் பயிற்சி, கட்டுரைப் பயிற்சி முதலிய பகுதிகள் புத்தகந்தோறும் மாணவர்கட்கு விளங்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன. சிறப்பு வகைப் பாடங்கள் பொது வகையினும் சிறப்பான அறிவையும் சிந்திக்கும் ஆற்றலையும் பெருக்குவனவாய் அமைந்துள்ளன. ஆங்காங்கு ஏற்ற படங்களும் புத்தகங்களை அணி செய்கின்றன.

ஒவ்வொரு புத்தகத்திலும் சொல்லகராதி தரப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, அரும்பதங்களுக்குப் பொருள் காணுமாறு மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதும், அதனால் மாணவர்கள் அகராதி பார்க்கும் முறையை உணர்தல் வேண்டும் என்பதும் பாட அமைப்பின் நோக்கமாகும்.

ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் தெளிவாகவும், அறிவை விருத்தி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அப்பயிற்சிகளைப் பயில்வதால் மாணவர்கள் பாடங்களை ஐயமின்றி உணரலாம்; சோதனைக்கு அஞ்ச வேண்டுவதில்லை. அப்பயிற்சிகளை மாணவர்கள் பள்ளியிலோ, வீட்டிலோ பயிலுமாறு செய்து, ஆசிரியர்கள் கண்காணிப்பார்களாயின், அவை மாணவர்க்குப் பெருநலமளிக்கவல்லனவாகும். செய்யுட்பகுதிக்குக் குறிப்புரையும் தரப்பட்டுள்ளது. பல்வகையாலும் மாணவர்க்குச் சிறப்பான வகையில் பயன் தரவல்ல இச்சிறப்பு வகை உமா வாசக புத்தகங்களைப் பள்ளிகளில் பாட புத்தகங்களாக்கி மாணவர்கள் பயன் பெறுமாறு ஆவன செய்ய ஆசிரியர்களை வேண்டுகின்றேன்.

சென்னை,
12—10—51

இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா

உள்ளுறை

உரை நடைப் பகுதி

எண்	பொருள்			பக்கம்
1.	விக்கிரமாதித்தன்	....	....	1
2.	பொன்னும் வெள்ளியும்	....	....	6
3.	கவி மணி	....	....	11
4.	காஷ்மீரம்	....	....	18
5.	அசோகர்	....	....	24
6.	மின்சாரம்	....	....	29
7.	மானம் காத்த மன்னன்	....	....	36
8.	சந்தன மரம்	....	....	42
9.	கிராமமும் கைத்தொழில்களும்	....	....	47

செய்யுட்பகுதி

I.	வாழ்த்து	....	....	54
II.	அறவுரை :			
	1. நீதி வெண்பா	....	....	54
	2. நன்னெறி	....	....	54
	3. திரிகடுகம்	....	....	55
	4. நான்மணிக்கடிகை	....	....	55
	5. சிறுபஞ்சமூலம்	....	....	55
	6. அறநெறிச்சாரம்	....	....	56
III.	காதை :			
	வேடன் கதை	....	....	56
IV.	பல்சுவை :			
	1. தமிழ் வாணி	....	....	57
	2. காந்தி	....	....	57
	3 தமிழ் நாடு	....	....	57
	4. தமிழிற்குப் பணி	....	....	58
	5. பாரத நாடு	....	....	58
	6. தமிழ்க் கடவுள்	....	....	58
	செய்யுட்பகுதி-குறிப்புரை	....	....	59
	அகராதி	....	....	i

உமா வாசகம்

(ஆறும் புத்தகம்)

சிறப்புப் பகுதி

1. விக்கிரமாதித்தன்

1. நாம் வாழும் நாடு இந்தியா. இதனைப் பாரத தேசம் என்றும் பரத கண்டம் என்றும் ஆன்றோர் கூறுவர். துஷ்யந்தன் என்பான் ஒரு மன்னன். அவன் மனைவி சகுந்தலை என்பாள். அவ்விருவர்க்கும் பிறந்த மகன் பரதன் என்பவன். இஃது அவனால் ஆளப்பட்ட தேசம் ஆதலின், பாரத தேசம், பரத கண்டம் என்னும் பெயர் பெற்றது. பாரத தேசத்தில் வீரம், நீதி முதலியன நிறைந்த பேரரசர் பலர் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களுள் ஒருவன் விக்கிரமாதித்தன் என்பவன்.

2. வடவிந்தியாவை ஆண்ட அரசர் பலருள் ஒருவன் சமுத்திர குப்தன் என்பவன். அவன் மனைவி தத்தா தேவி என்பவள். சமுத்திர குப்தன் தன் ஆட்சிக் காலத்தில் பல நாடுகளையும் வென்று தன் நாட்டை விரிவுபடுத்தினான். அவன் யாவராலும் போற்றப்பட்டான். தத்தா தேவி நற்குண நற்செயல்கள் நிறைந்தவள்; பேரரசிக்கு இருக்க வேண்டிய உத்தம குணங்கள் யாவும் பொருந்தியவள். இவள் ஓராண் மகவை ஈன்றாள். அம்மைந்தனே விக்கிரமாதித்தன் எனப் பிற்காலத்தில் விளங்கிய பேரரசன்.

3. விக்கிரமாதித்தன் இளமையில் அரசிளங்குமரர்களுக்குரிய கலைகள் யாவற்றையும் கற்றான்; இளஞ்சிங்கம் போல விளங்கினான்; அறிவாற்றல்களிலும் சிறந்தவனானான். அனைவரும் அவனைப் போற்றினர். சமுத்திர குப்தனுக்குப்பின் விக்கிரமாதித்தன் அரசனானான்.

4. விக்கிரமாதித்தன் அரியணை ஏறியதும் நாட்டின் நலங்களை நாடிச் செய்து, வருவாயைப் பெருக்கினான்; வலிமை மிக்க சேனைகளை ஏற்படுத்தி நாட்டைத் தீங்கின்றிக் காத்தான். அவன் படை வலியால் ஐந்தாண்டுகள் ஓயாது தொடர்ந்து போர் புரிந்து, **மாளவம், கூர்ஜரம், கத்தியவார்** முதலான நாடுகளின் அரசர்களை வணக்கித் தன்கீழ்ச் சிற்றரசர்களாக்கிக்கொண்டான். அதனால், மேற்குக் கடற்கரை அவனதாயிற்று. விக்கிரமாதித்தன் மேற்குக் கடல் வழியாக **எகிப்து, கிரீஸ், ரோமாபுரி** முதலான நாடுகளோடு வாணிகத்தைப் பேணிப் பெருக்கினான். அதனால், அவன் நாட்டில் செல்வம் செழித்தது; மக்கள் இன்புற்று வாழ்ந்தார்கள்.

5. விக்கிரமாதித்தன் செய்த செயல்கள் பற்பல. அவனுடைய அறிவையும் ஆற்றலையும் போற்றுதவர் இல்லை. அவன் காலத்தில் **உருத்திரசிம்மன்** என்றோர் அரசன் இருந்தான். அவன் நாடு, விக்கிரமாதித்தன் நாட்டிற்கு மேற்பால் இருந்தது. உருத்திரசிம்மன் நாட்டின் நலத்தில் நாட்டம் கொள்ளாது, தன் இன்பம் ஒன்றையே பெரிதாக எண்ணி, அந்தப்புரத்திலேயே அரசியோடு இருந்து வந்தான். நாட்டின் கவலை இன்றித் தன் இன்பம் ஒன்றையே கருதி வாழும் அவ்வரசனை ஒறுத்தலே அறம் என்று விக்கிரமாதித்தன் தீர்மானித்தனன். தான் நினைத்ததைச் செய்யும் ஆற்றலுடையவன் அன்றோ விக்கிரமாதித்தன்? அவன் படை கொண்டு சென்று, முற்றுகை இட்டான். உருத்திரசிம்மன் போருக்கு வந்தான். போர் நடந்தது. வெற்றி விக்கிரமாதித்தனுக்கே என்பதைக் கூறவும் வேண்டுமோ? உருத்திரசிம்மன் சிறைப்பட்டான்.

6. 'விக்கிரமாதித்தன்' என்பதற்கு 'வல்லமையில் சூரியனைப்போல ஒளிபெற்று விளங்குபவன்' என்பது பொருள். விக்கிரமாதித்தன் வீரத்திற்சிறந்தவன் என்பதை அவனுடைய போர்ச் செயல்கள் நன்கு விளக்கும். அவன் வீரம் பொருந்தியிருந்தது போலவே, ஊக்கம், கொடை முதலிய நற்குணங்களிலும் சிறந்து விளங்கினான். அவன் காலத்து நாணயங்களில் விக்கிரமாதித்தன் சிங்கத்தோடு பொருவது போன்று பொறிக்கப்பட்டிருக்கும். இது வீரத்தை விளக்குவதாகும்.

7. விக்கிரமாதித்தனுடைய குணநலன், ஆட்சித் திறன், பெருமை முதலியவற்றை விளக்கப் பல நூல்களுள்ளன. மற்றும், இக்காலத்தில் 'பாட்னு' என வழங்கும் **பாடலிபுரத்தில்** உள்ள கற்றூண் ஒன்றில் அவை பொறிக்கப்பட்டுள்ளன. அவன் காலத்தில் பாடலிபுரம் சிறந்து விளங்கியது. அந்நகரில் இருபெருங் கலாசாலைகள் இருந்தன. பலர் கல்வி கற்றனர். அவன் காலத்தில் சத்திரங்கள், சோலைகள், அறச்சாலைகள், இளைப்பாறும் இடங்கள், சாலைகள், மருத்துவச் சாலைகள் முதலியன நாட்டில் எங்கும் இருந்தன. நோயாளிகளுக்கு உணவும், மருந்தும், இடமும் இலவசமாக அளிக்கப்பட்டன.

8. விக்கிரமாதித்தன் குடி மக்களுக்கு யாதொரு குறையும் இன்றி ஆண்டு வந்தான். அவன் நாட்டில் கொலை, களவு முதலான தீய செயல்கள் இல்லை; புலாலுண்ணல், கள் குடித்தல் என்பன அறவே ஒழிக்கப்பட்டன; வீண் கலகம் செய்வார்க்கு வலக்கையை இழக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. ஒழுக்க நெறியில் தவறியவரைச் சண்டாளர் என்பதும், அவர் ஒரு கோலைப் பூமியில் தட்டிக்கொண்டு தெருக்களில் செல்ல வேண்டும் என்பதும் அவன் காலத்திலிருந்த வழக்கம். அதனால், குடிகள் சிறு குற்றத்தைச் செய்யவும் நாணினார்கள்; அஞ்சினார்கள். நிலத்தின் விளைவுக்குத் தக்கபடி வரி வசூலிக்கப்பட்டது. குடிமக்கள் ஐவகைத் துன்பமுமின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். அரசன் குடிமக்களைத் தன் உயிர்போலக் கருதினான். குடிகளும் அவனைத் தந்தை போலக் கருதினார்கள். எனவே, அவன் ஆட்சியை யாவரும் புகழ்ந்தனர். அவன் புகழ் எங்கும் பரவியது. '**விக்கிரம சகாத்தம்**' என்னும் ஆண்டும் அவன் ஆட்சிச் சிறப்பை விளக்கத் தோன்றியது.

> **"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;**
> **மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்."**

என்பது உண்மையன்றோ?

9. விக்கிரமாதித்தன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன். அவன் புலவர் பலரை ஆதரித்தான். **காளிதாசர்** என்பவர் வடமொழியில் மிகச் சிறந்த புலவர். அவர் **சாகுந்தலம்** என்னும்

நாடகநூலை இயற்றி அவன் அவையில் அரங்கேற்றினர். அவன் காலத்தில் வானநூல்களும், கணித நூல்களும் வெளி வந்தன. சிற்பம், ஓவியம் என்னும் கலைகளையும் விக்கிரமாதித்தன் ஆதரித்து வளர்த்தான் என்பதை அஜந்தாக் குகையிலுள்ள சிற்ப ஓவியங்கள் நன்கு விளக்கும். இவ்வாறு விக்கிரமாதித்தன் பலவகையிலும் நாட்டிற்கு நலங்கள் பல விளைத்து, நாற்பதாண்டுகள் அரசாண்டான். அவனைப் பற்றிக் கூறும் நூல்கள் பலவற்றுள் **முப்பத்திரண்டு பதுமை கதை** என்னும் தமிழ் நூலும் ஒன்று. அவனுக்குப் பின் அவன் மகன் **குமார குப்தன்** என்பவன் அரசனுனன்.

அரும்பதம்: பொருள் காண்க:

ஆன்றோர்	வணக்கி	ஒறுத்தல்	அறவே
கண்டம்	வர்ணிகம்	முற்றுகை	அரங்கேற்றல்
கலைகள்	ஆற்றல்	பொருவது	மலர்தலை
வருவாய்	அந்தப்புரம்	பொறித்தல்	அரியணை

சிறு விடை வினுக்கள்:

1. இந்தியாவிற்குப் 'பாரத தேசம்' என்று பெயர் வரக் காரணம் என்ன?

2. விக்கிரமாதித்தன் பெற்றோர் யாவர்?

3. விக்கிரமாதித்தன் அரசனுனதும் செய்தவை யாவை?

4. உருத்திரசிம்மனைப் பற்றி நீ அறிவதென்ன?

5. விக்கிரமாதித்தன் நாட்டிற்குச் செய்த நலன்கள் யாவை?

6. '**விக்கிரம சகாத்தம்**' ஏற்படக் காரணம் என்ன?

7. ஐவகைப் பயங்கள் யாவை?

8. விக்கிரமாதித்தன் அவையில் விளங்கிய புலவர் யார்? அவர் இயற்றிய நூல் யாது?

9. விக்கிரமாதித்தன் கலைகளை ஆதரித்தான் என்பதற்கு ஆதாரம் என்ன?

10. அவனைப்பற்றிய தமிழ் நூல் யாது? அவன் எத்தனை ஆண்டுகள் அரசாண்டான்? அவன் மகன் யார்?

கட்டுரைப் பயிற்சி :

1. 'அரசன் நாட்டிற்குச் செய்யும் நலன்கள்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. 'விக்கிரமாதித்தன் வீரமும் இயல்பும்' என்பதைத் தலைப்பாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.

பயிற்சி—1

1. ஆன்றோர், ஆற்றல், பொறித்தல், ஒறுத்தல், அறவே— இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

2. மரம் + வேர் = மரவேர்

ஓவியம் + நூல்
சிற்பம் + நூல்
நாடகம் + நூல்
கணிதம் + நூல்
} இவற்றைச் சேர்த்து எழுதுக.

3. (அ) விக்கிரமாதித்தன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன்.
(ஆ) அவன் புலவர் பலரை ஆதரித்தான்.

இவ்விரண்டு வாக்கியங்களையும் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுதுக.

4. காளிதாசர் என்னும் வடமொழியில் மிகச் சிறந்த புலவர் சாகுந்தலம் என்னும் நாடக நூலை இயற்றி அவன் அவையில் அரங்கேற்றினர்.

இதனை மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

பயிற்சி—2

பிரித்துக் காட்டுக :—

உணர்வதரிது = உணர்வது + அரிது
அறிவாற்றல் =
அவனதாயிற்று =
உயிரன்று =

விளக்கம் :

ஐவகைத் துன்பம் :—

1. அரசன் தன்னால்
2. அரசன் சுற்றத்தாரால்
3. பகைவரால்
4. கள்வரால்
5. விலங்குகளால்

} குடிகளுக்கு நேரும் துன்பங்கள்.

2. பொன்னும் வெள்ளியும்

1. பூமியின்மேல் நாம் பலவகைப் பொருள்களைக் காண்கின்றோம். அவைகளில் நமக்குப் பயன்படுவன பல. அவ்வாறே பூமியின் உள்ளும் நமக்குப் பயன்படும் பொருள்கள் உள்ளன. தாதுப்பொருள்கள் பலவற்றையும் நாம் பூமியிலிருந்து எடுக்கின்றோம். பூமியைத் தோண்டி எடுக்கப்படும் பொருள்களுட் சிறந்தவை உலோகங்கள். பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் என்னும் ஐந்தும் பூமியினடியிலிருந்து எடுக்கப்படுகின்றன. அவற்றைப் '**பஞ்சலோகங்கள்**' அல்லது '**ஐம்பொன்**' என்று முன்னோர் கூறினர். பின்னர்ப் பாதரஸம் கிடைத்தது. ஆராய ஆராய, எழுபது உலோகப்பொருள்கள் பூமியிலிருந்து எடுக்கப்பட்டன. உலோகங்களோடு கலந்து காணப்படுவன தாதுப்பொருள்கள்.

2. உலோகங்கள் வெட்டியெடுக்கப்படும் இடத்திற்குச் '**சுரங்கம்**' என்பது பெயர். அதற்குக் '**கனி**' என்ற பெயரும் உண்டு. உலோகங்கள் தனியாக அகப்படுவதில்லை. அவை மற்றப் பொருள்களுடன் கலந்தே காணப்படும். அவ்வாறு கலந்துள்ள பொருள்களுக்குத் தாதுப்பொருள்கள் என்பது பெயர். சுரங்கங்களில் வேலை செய்பவர்கள் தாதுப்பொருள்களை வெட்டி எடுத்துப் பொடியாக்கிப் பின்பு சில முறைகளால் உலோகங்களைப் பிரித்தெடுக்கிறார்கள்.

3. உலோகங்களுள் மிகச் சிறந்தது பொன். இதனைச் செம்பொன் என்றும், வெள்ளியை வெண்பொன் என்றும், இரும்பைக் கரும்பொன் என்றும் நாம் வழங்குகிறோம். பொன் மஞ்சள் நிறம் வாய்ந்த திண்மையான உலோகம். அது நெகிழ்ச்சியுடையது. ஆதலால், அதை மிக இலேசான தகடுகளாகச் செய்யலாம்; கம்பிகளாக இழுக்கலாம். மற்ற உலோகங்களைக்காட்டிலும் பொன் அருமையாகக் கிடைப்பதால், விலையுயர்ந்தது. பொன்னில் துருப் பிடியாது. பொன் நாணயம் செய்யவும், ஆபரணங்கள் செய்யவும் உபயோகப்படுகிறது. நகைகள் செய்யும் பொழுது பொன்னோடு சிறிது

செம்பைக் கலந்து செய்வது வழக்கம். பொன் நாணயங்களிலும் சிறிதளவு செம்பு கலந்திருக்கிறது. சுத்தமான பொன்னுக்குத் **தங்கம், கனகம்** என்ற பெயர்களும் உண்டு. பொன்னின் நேர்த்தியை அளவிட்டுச் சொல்லும் அளவு, **மாற்று** எனப்படும். தங்கம் பத்தரை மாற்று அளவுள்ளது. தங்கத்திற்குப் பளபளப்பான ஒளியுண்டு. 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல,' என்ற பழமொழியும் உண்டு. **ஆடகம், கிளிச்சிறை, சாம்பூநதம், சாதரூபம்** என்ற நால்வகைப் பொன் உண்டு எனத் தமிழ் நூல்கள் கூறும்.

4. வெள்ளி சிறிது கெட்டியானது. வெள்ளியிலும் துருப் பிடியாது. இந்த உலோகம் வெண்மையாயிருத்தலால், வெள்ளி என்னும் பெயர் பெற்றது. சுத்த வெள்ளிக்குச் **சொக்க வெள்ளி** என்பது பெயர். வெள்ளியையும் தகடுகளாகவும் கம்பிகளாகவும் செய்யலாம். நகைகள் செய்யவும் நாணயங்கள் செய்யவும் வெள்ளியும் பயன்படுகின்றது. பொன்னையும் வெள்ளியையும் மிக நுண்ணிய நூலிழைபோன்ற கம்பிகளாக இழுத்துப் பட்டு நூல்களுடன் கலந்து, ஆடைகளுக்குக் கரைகள் அமைக்கிறார்கள். அவற்றை வெள்ளிச் சரிகை, பொற்சரிகை என வழங்குவர்.

5. பொன்னையும் வெள்ளியையும் இக்காலத்தில் நாணயங்களாக வழங்குகிறார்கள். இந்நாணயங்கள் வியாபாரத்திற்குப் பெருந்துணை புரிகின்றன. வியாபாரத்திற்கு ஒரே நாணயமும் அதனைச் செய்ய ஒரே உலோகமும் இருத்தல் வேண்டும். அங்கிலேயில் எல்லாத் தேசத்தவர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்கது பொன் ஒன்றே.

6. நம் நாட்டில் பொன், பெண்டிர்க்கு அணிகலன்களாய் அமைந்து விளங்குகிறது. நகைப் பைத்தியம் எக்காலத்திலும் எத்தேசத்திலுமுண்டு. நாகரிகமற்ற காட்டு மனிதரும் பொன்னைக் கட்டியான ஆபரணமாக்கி அணிந்திருந்தனர். நாகரிகம் மிக்க **இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி** என்னும் நாட்டு மக்களும் இன்றும் பொன்னணி பூணும் ஆசையை விடவில்லை. பொன்னைக்கொண்டு பாத்-

திரங்கள், நகைகள் செய்வதோடு, விமானங்கள், வாகனங்கள் முதலானவற்றிற்குத் தங்க முலாமும் பூசுகிறார்கள்.

7. ஆங்கிலேயரும் பிறரும் ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் குடியேறியது பொன்னின்பொருட்டே. ஆப்பிரிக்காவில் பொற்சுரங்கங்கள் உள்ளன. ஆற்றுப் படுகைகளிலும் அவற்றை அடுத்த கற்பாறைகளிலும் ஒட்டிக் கிடந்த பொன், மக்களுக்கு ஊதியத்தை, வாழ்க்கையை அளித்தது. உலகில் ஆண்டுதோறும் இரண்டு கோடி அவுன்ஸ் பொன் கிடைக்கிறது. ஒரு கோடி அவுன்ஸ் பொன்னுக்குமேல் ஆப்பிரிக்கா நாட்டிலுள்ள டிரான்ஸ்வால் பிரதேசத்தில் கிடைக்கிறது. இந்தியாவில் குடகு, மைசூர், வயநாடு என்னும் இடங்களில் பொன் கிடைக்கிறது. கோலார்த் தங்கச் சுரங்கம் நம்



நாட்டில் பலருக்குத் தெரிந்த இடம். கோலார்ப் பொற்சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளிகளுள் பெரும்பாலார் தமிழரே.

8. பொன் பூமியின் கீழ் அகப்படுவதன்றோ? பொற்சுரங்கத்தில் வேலை செய்பவர் பூமியில் நாலாயிரம் அடிக்குக் கீழும் செல்வர். மின்சார வண்டியும், விசிறியும் விளக்கும் அவர்களுக்கு மிகவும் பயன்படுவன. கல்லும் மண்ணும் பொற்பொடியுடன் கலந்திருக்கும். பாதரஸத்தைக்கொண்-

டும், கம்பளியையும் 'பொட்டாஸியம் ஸைனேட்' என்னும் உப்பையும் கொண்டும் பொன்னைப் பிரித்தெடுக்கிறார்கள். ஒரு வண்டிப் பொற்பொடிக் கற்களிலிருந்து ஓர் அவுன்ஸ் பொன்னே கிடைக்கிறது. அதனாலேதான் பொன் மிகவும் அருமையான உலோகமாயுள்ளது.

அரும்பதங்கள் : பொருள் காண்க :

தாதுப்பொருள்	இலேசான	படுகை
உலோகம்	தரு	பெரும்பாலார்
ஆராய்தல்	நாணயம்	நுண்ணிய
கனி	அணிகலன்	நெகிழ்ச்சி

சிறு விடை வினாக்கள் :

1. பூமியிலிருந்து எடுக்கப்படுவன எவை?
2. ஐந்து உலோகங்கள் எவை?
3. 'கனி' என்பதற்கு வேறு பெயர் யாது?
4. பொன்னைப்பற்றி நீ அறிவன யாவை?
5. தமிழ் நூல்கள் கூறும் நால்வகைப் பொன் யாவை?
6. நாணயங்கள் எவற்றால் செய்யப்படுகின்றன?
7. பொன் எங்கெங்குக் கிடைக்கிறது?
8. இந்தியாவில் பொன் கிடைக்குமிடங்களைக் கூறுக.
9. பொன் எவற்றுடன் கலந்திருக்கும்? அதை எவ்வாறு பிரித்தெடுக்கின்றனர்?
10. பொன்னின் பயன்களைக் கூறுக.

கட்டுரைப் பயிற்சி :

1. 'உலோகங்களின் உபயோகங்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

2. 'வர்த்தகத்திற்குப் பொன்னும் வெள்ளியும் பயன்படுவன' என்பதை விளக்கிக் கட்டுரை எழுதுக.

3. சுரங்கத்தினின்று எடுக்கப்படும் வேறு பொருள் யாது? அதைப்பற்றி நீ அறிந்ததை எழுதுக.

4. 'பொன்னும்பெண்டிரும்' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

பயிற்சி—1

1. 'உலோகங்கள் வெட்டியெடுக்கப்படும் இடத்திற்குச் சுரங்கம் என்பது பெயர்.'—இவ்வாக்கியத்தைக் கருத்துப் பிறழாமல் வேறு எவ்விதமாகக் கூறலாம்?

2. ஆராய ஆராய, பளபளப்பு—இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுதுக.

3. பொன்னால் செய்யும் நகைகளுக்கும், வெள்ளியால் செய்யும் பொருள்களுக்கும் சில உதாரணங்கள் தருக.

4. தரு, சரிகை—இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

பயிற்சி—2

1. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகளை எழுதி அவற்றின் பொருளை விளக்குக.

2. திண்மை, நெகிழ்ச்சி, பிரித்து—இவற்றிற்கு எதிர்ப் பதங்கள் கூறுக.

3. 'நகை' என்னும் பொருள் தரும் வேறு சொற்கள் எவை? இச்சொல்லிற்கு இரண்டு அர்த்தம் கூறுக.

4. சுத்த வெள்ளி, தங்கம் என்பனவற்றிற்குரிய வேறு பெயர்கள் யாவை?

பயிற்சி—3

1. நிலக்கரி, மண்ணெண்ணெய்—என்பனபற்றி நீ பிற புத்தகங்களில் படித்து அவற்றைப்பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

2. 'கோலார்த் தங்கச் சுரங்கம்'—என்பது பற்றிப் படித்தோ, கேட்டோ எழுதுக.

3. 'பெரும்பாலார்' என்பதன் எதிர்ப்பதம் யாது? இதனை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

3. கவி மணி

1. தமிழ் மொழி வழங்கும் நாடு தமிழ் நாடு. தமிழ் நாட்டில் வாழ்பவர் 'தமிழர்' எனப்படுவர். தமிழ் மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது; இனிமையானது. தமிழ் மொழியில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 'தொல்காப்பியம்' என்னும் நூல் உள்ளது. 'சங்க நூல்கள்' என்பவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவை.

2. தமிழ் மொழி காலத்திற்கு ஏற்றுற்போல வளர்ச்சி அடைந்து சிறப்புற்றது. தமிழகம் காலத்திற்கேற்ற கவிஞர்களைத் தோற்றுவித்துள்ளது. இக்காலத்தில், பல புலவர்கள் தோன்றிக் காலத்திற்கேற்பத் தமிழ் மொழியை வளப்படுத்தியுள்ளார்கள். அப்புலவருள் சிலர் சி. சுப்பிரமணிய பாரதியார், **கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை, சென்னை அரசாங்க ஆஸ்தானக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, யோகி சுத்தானந்த பாரதியார், புரட்சிக் கவி பாரதி தாசன்** என்பவர். இவர்களுள் சி. சுப்பிரமணிய பாரதியார் நீங்கலாக மற்றையவர் நம் காலத்தில் வாழ்பவராவர்.

3. குழந்தைகளிடம் அன்பு கொண்டு, குழந்தைகளுக்கெனக் கவிகள் பாடியவர் கவி மணி தேசிக விநாயகம் பிள்ளையாவர். அவர் பாடிய பாடல் தொகுதி 'மலரும் மாலையும்' என்னும் பெயர் பெறும். அந்நூலை அவர்,

"செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்தநூல் உரியதாய் என்றும் வாழ்கவே."

என்று உரிமையாக்குகிருர். இது, குழந்தைகளிடத்தில் கவி மணி எவ்வளவு பேரன்புடையவர் என்பதை விளக்கும்.

4. தமிழ் நாட்டின் தெற்கெல்லை, 'குமரி முனை'. தமிழ் நாட்டின் தென்பகுதியும், திருவிதாங்கூர்ச் சம்ஸ்தானத்தின் தென்கோடியுமாய் அமைந்தது நாஞ்சில் நாடு என்பது. இந்நாட்டில் சுசீந்திரம் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது. சுசீந்திரத்தை அடுத்து விளங்குவது தேரூர் என்னும் சிற்றூர். அவ்வூரில் கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை பிறந்தார்.

5. கவி மணியின் தந்தையார், சிவதாணுப் பிள்ளை; தாயார், ஆதிலட்சுமியம்மையார். கவி மணி 1876-ஆம் ஆண்டு பிறந்தார். கவி மணியின் தாய் வழிப் பாட்டனுரான மாணிக்க வாசகம் பிள்ளை என்பவர், காரியந்தாதி என்னும் பிரபந்தத்தைப் பாடியவராவர். தந்தையார் வழியும் தமிழ்ப் பற்றுடைய குடும்பமே. எனவே, தாயார் வழியிலும், தந்தையார் வழியிலும் தமிழபிமானமுண்டு.

6. தேசிக விநாயகம் பிள்ளை தம் ஊரிலிருந்த ஆரம்பப் பள்ளியில் கல்வி கற்ருர். பின்னர் அவர் தம் பத்தாவது வயதில் கோட்டாறு என்னும் ஊரிலிருந்த ஆங்கிலக் கலாசாலையில் மாணவராகி, 'மெற்றிக்குலேஷன்' பரீட்சையில் தேறினுர். கவி மணிக்குப் பத்து வயதான பொழுது அரசியல் அலுவலிலிருந்த தந்தையார் காலமானுர். கவி மணி எப். ஏ. வகுப்பில் சேர்ந்தாராயினும், இடையில் விடுத்துத் திருவனந்தபுரத்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பயின்று, ஆசிரியர் பரீட்சையில் தேர்ச்சி பெற்ருர்.

7. கவி மணிக்கு இளம்பருவத்திலிருந்தே தமிழ்மொழியில் அளவிலாப் பற்றிருந்தது. அதனுல், அவருக்குத் தமிழை

நன்கு கற்க வேண்டும் என்னும் பேரார்வம் உண்டாயிற்று. தேரூர்க்கு அண்மையிலிருப்பது '**வாணன் திட்டு**' என்பது. அங்குத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மடம் ஒன்று உண்டு. அம்மடத்திற்கு அந்நாளில் **சாந்தலிங்கத் தம்பிரான்** என்பவர் தலைவராயிருந்தார். அவர் தமிழ் மொழியைச் சிறக்கக் கற்றவர். அவரிடம் மாணவர் சிலர் தமிழ் கற்று வந்தனர். கவி மணியும் அவரிடம் சென்று தமிழ் கற்று வந்தார். இலக்கிய இலக்கணங்களைக் கவி மணி ஐயம் திரிபறக் கற்றார்; கவி பாடும் திறலையும் பெற்றார். ஆசிரியர் விருப்பப்படி கவி மணி அந்நாளில் '**அழகம்மை ஆசிரிய விருத்தம்**' என்னும் கவிதையைப் பாடினார்; பின்னர், சுசீந்திரத்துப் பெருமான்மீது '**சுசீந்தை மாலை**' என்னும் நூலையும் பாடினார்.

8. கவி மணி தம் இருபத்தைந்தாம் வயதில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். அவர் முதலில் கோட்டாற்றில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியராய் அமர்ந்தார்; பின்னர் நாகர் கோயில் போதனு முறைக் கலாசாலை ஆசிரியரானார். அவரது தமிழ்ப் புலமையை உணர்ந்து அரசாங்கத்தினர் அவரைத் திருவனந்தபுரப் பெண்கள் கலாசாலைக்குத் தமிழாசிரியராக நியமித்தனர். தமிழாசிரியரான கவி மணி, குழந்தைகளுக்கென அரிய இனிய கவிதைகளை இயற்றலானார். கவி மணி தென்னிந்திய வரலாற்று ஆராய்ச்சியிலும், கல்வெட்டுக்களை ஆராய்வதிலும் வல்லவரானார். அவர் அக்காலத்தில் பல கட்டுரைகளை எழுதினார். அவை பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. பின்னர், கவி மணி பெண்கள் கல்லூரியின் தமிழாசிரியராய் இருந்து, 1931-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்; பின்னர், நாகர்கோயிலுக்கு இரண்டு மைல் வடக்கேயுள்ள **புத்தேரி** என்னும் சிற்றூரில் தங்கி வாழ்ந்து வருகின்றார்.

9. கல்லூரிப் படிப்பை விட்டதும், கவி மணி **உமையம்மையார்** என்பவரை மணந்து, இல்லறம் நடத்துவாரானார். பல்வேறு குடும்பக் கவலைகளிடையிலும் கவி மணி தமிழ்ப்பணி புரிதலை மறக்கவில்லை. ஓய்வு பெற்ற பின்னர் அவர் தாம் பாடிய கவிதைகளைத் தொகுத்து, '**மலரும் மாலையும்**' என்னும் பெயரால் வெளியிட்டார். '**லைட் ஆப் ஏஷியா**' என்பது எட்-

வின் ஆர்நால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய செய்யுள் நூல். அதனை '**ஆசிய ஜோதி**' என்னும் பெயரால் அழகிய செய்யுட்களாக மொழி பெயர்த்தார் கவி மணி. பாரசிக மொழியிலுள்ள **உமார் கய்யாம்** பாடல்களையும் தமிழ்ச் செய்யுளாகக் கவி மணி பாடியுள்ளார். '**மருமக்கள் வழி மான்மியம்**' என்னும் நூல் கவி மணியால் இயற்றப்பட்டது. அது நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் குடும்பத் தாய முறையைப் பரிகசிப்பது போன்ற கவிதை நூல். '**காதல் பிறந்த கதை**' என்னும் நூல், கீர்த்தனைகளும் பாடல்களும் கொண்டது.

10. கவி மணியிடம் சிறந்த இயல்புகள் பல உண்டு. பிறரைக் கெஞ்சி நிற்கும் இயல்பு அவரிடம் இல்லை. அவர் அடிமைத் தன்மையை அறவே வெறுத்தவர். 'மானம் அழிய வாழ்தலிழிவு,' என்பது அவருடைய சிறந்த கொள்கை. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினர், 1940-ஆம் ஆண்டு, அவர்க்குக் '**கவி மணி**' என்னும் பட்டத்தைச் சூட்டினர். கவி மணி அவா, வெகுளி, ஆடம்பரம் என்பவற்றை முற்றிலும் வெறுத்தவர்; அடக்கம், அமைதி, பணிவு, இன்சொல், எளிமை என்பவற்றை விரும்பி ஏற்றவர். **செட்டி நாட்டரசர் ராஜா ஸர் அண்ணமலைச் செட்டியாரவர்கள்**, தம் மாளிகையில் கவி மணியைப் பாராட்டுதற்கு ஒரு விருந்தளித்தார்; விருந்தின் முடிவில் ஆயிரம் ரூபாய் கொண்ட முடிப்பு ஒன்றையும் பரிசாக அளித்தார். 'முடிப்பு எதற்கு?' என்று முதலில் கேட்ட கவி மணி, பின்னர் அரசர் மனம் வருந்தாமலிருத்தற்காக ஏற்றுக்கொண்டு, அந்த முடிப்பைக்கொண்டு திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பரீட்சையில் முதல் தரமாகத் தமிழில் தேர்ச்சி பெறும் மாணவர்க்கு ஆண்டு தோறும் பரிசு அளிக்குமாறு ஏற்பாடு செய்தார். இஃது ஒன்றே கவி மணி பொருளிற் பெருவிருப்பு உடையவரல்லர் என்பதைப் புலப்படுத்தும்.

11. கவி மணி குழந்தை போன்ற களங்கமற்ற தூய மனம் படைத்தவர். அவருள்ளத் தெளிவை அவருடைய பாடல்களிற்காணலாம். கவி மணி, தேசிய கவி சி. சுப்பிரமணிய பாரதியாரிடம் அளவிலாப் பற்றுடையவர். பாரதியார்

பாடல்களைச் சுவைத்துப் படித்துத் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் கவி மணி என்பதைப் '**பாடிய வாய் தேனூறும் பாரதியார் பாடல்**' என்பதாலும்,

> ***" பாப்பாப் பாட்டிலே — நெஞ்சைப்***
> ***பறிகொ டுத்தேனடா !***
> ***சாப்பா டேதுக்கடா !—சீனிச்***
> ***சர்க்கரை ஏதுக்கடா !"***

என்பதாலும் அறியலாம். இத்தகைய பெரும்புலவரது ஆசியைப் பெற்ற பத்திரிகைகளும், தமிழ்க் கழகங்களும், ஆண்டு விழாக்களும் தமிழகத்தில் பல. இப்பெரும்புலவர் முதிர்ந்த வயதுடையவராய் இன்றும் படித்துக்கொண்டும், கவிகள் இயற்றிக்கொண்டும் வாழும் பாக்கியத்தைப் பெற்ற தமிழகம் பெறலரும்பேறு பெற்றதேயாகும்! தமிழ்ப் பணியில் தளராத ஊக்கங் கொண்ட கவி மணி நீடு வாழக் கடவுளைத் துதிப்போமாக!

அரும்பதம்: பொருள் காண்க:

தொன்மை	சம்ஸ்தானம்	பற்று	போதனு முறை
ஏற்றுற்போல	அந்தாதி	அபிமானம்	ஆய்வது
கவிதை	பிரபந்தம்	ஐயம் திரிபு அற	கல் வெட்டு
கீர்த்தனை	நியமித்தனர்	ஆசி	வெகுளி

சிறு விடை வினுக்கள்:

1. தமிழர் என்பது எவர்க்குப் பெயர்?
2. தொல்காப்பியமும், சங்க நூல்களும் எக்காலத்தன?
3. இக்காலப் புலவர் யாவர்?
4. 'மலரும் மாலையும்' என்பது யாது?
5. தேசிக விநாயகம் பிள்ளை குழந்தைகளிடம் பற்றுள்ளவர் என்பதை நீ எப்படி அறிவாய்?
6. தேசிக விநாயகம் பிள்ளையின் கல்வியைப்பற்றி நீ என்ன அறிகிறாய்?

7. அவர் யாரிடம் தமிழ் கற்றார்? அவர் எங்கெங்கு வேலை பார்த்தார்?

8. 'ஆசிய ஜோதி' என்பது யாது?

9. கவி மணி பொருளில் விருப்பில்லாதவர் என்பதை விளக்குக.

10. கவி மணி பாரதியாரிடம் பற்றுள்ளவர் என்பதை எதனால் அறியலாம்?

11. கவி மணியின் இயல்புகளை விளக்குக.

கட்டுரைப் பயிற்சி:

1. 'தமிழகம்' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

2. தமிழகம் காலத்திற்கு ஏற்பப் புலவர்களைத் தோற்று-வித்துத் தமிழை வளர்க்கிறது.—இதை விளக்கி எழுதுக.

3. பாரதியார், நாமக்கல் கவிஞர், கவி மணி, சுத்தானந்த பாரதியார், பாரதி தாசன்—என்பாரைப் பற்றி நீ கேட்டு அறிந்து எழுதுக.

4. ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரைப் பற்றிப் படித்-தும் பிறரைக் கேட்டும், அவர் செய்தவை பற்றி அறிந்தும் எழுதுக.

பயிற்சி—1

1. 'தமிழகம் காலத்திற்கேற்ற கவிஞர்களைத் தோற்றுவிக்-கின்றது.'—'கவிகள்' என்று ஆரம்பித்துக் கருத்துப் பிறழாமல் இவ்வாக்கியத்தை மாற்றி எழுதுக.

2. தமிழ் மிகவும் தொன்மையானது; இனிமையானது—இதனை ஒரே வாக்கியமாக எழுதுக.

3. தமிழ்ப்பற்று, தமிழபிமானம், தமிழார்வம்—இந்தத்-தொடர்களை அமைத்துச் சொந்த வாக்கியங்கள் எழுதுக.

பயிற்சி—2

1. ஆரம்பப் பள்ளி, கலாசாலை, கல்லூரி, பல்கலைக் கழகம்—இவற்றை விளக்குக.

2. 'கட்டுரை' என்பதற்கு மற்ெறாரு பெயர் யாது?

3. நீ அறிந்த பழந்தமிழ்ப் புலவர்கள் பெயர்களையும், நூற்பெயர்களையும் குறிப்பிடுக.

4. நீ பெரியவனானால் எவ்வாறு தமிழ்ப்பணி புரிவாய்?

பயிற்சி—3

கீழே புலவர்கள் பெயர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும் முறை மாறிக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சரி செய்து எழுதுக:—

	புலவர்கள்	நூல்கள்
1.	இளங்கோ	தமிழன் இதயம்
2.	சாத்தனார்	மலரும் மாலையும்
3.	திருவள்ளுவர்	தேசீய கீதங்கள்
4.	கம்பர்	நன்னெறி
5.	சேக்கிழார்	வாக்குண்டாம்
6.	ஔவையார்	பெரிய புராணம்
7.	சிவப்பிரகாசர்	இராமாயணம்
8.	சுப்பிரமணிய பாரதியார்	திருக்குறள்
9.	தேசிக விநாயகம் பிள்ளை	மணிமேகலை
10.	நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை	சிலப்பதிகாரம்

பயிற்சி—4

1. உனக்குத் தெரிந்த புலவர் வரலாறு ஒன்றை எழுதுக.

2. தமிழகத்தின் எல்லைகளை அறிந்து எழுதுக.

3. 'தாய் மொழி' என்பது என்ன? உன் தாய் மொழியை வளர்க்க நீ செய்வன யாவை?

4. தமிழ் மொழி, தமிழகம், தமிழர்—என்பன பற்றி நீ தெரிந்துகொண்டு, பின்பு 'தமிழும் தமிழ் நாடும்' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

4. காஷ்மீரம்

1. ஐரோப்பாவில் **இத்தாலி** என்னும் தேசம் உள்ளது. அத்தேசத்தில் **நேப்பிள்ஸ்** என்பது கவின் மிக்க நகர். 'மக்களாய்ப் பிறந்தவர்கள் அவ்வனப்பு மிக்க நகரைப் பார்த்த பின்னரே இறக்க வேண்டும்,' என்று ஒரு பழமொழி கூறுவர். உலகின் அழகு வாய்ந்த பூந்தோட்டம் **சுவிட்ஸர்லாந்து** என்பர். அங்கு இயற்கை அன்னை தன் சுந்தர வடிவத்தோடு விளங்குகிருள் என்பர். அவற்றைப் போல அழகே திரண்டு உருக்கொண்டாலென விளங்குவது **காஷ்மீரம்**. இந்திய நாட்டில் மேற்குக் கடற்கரை, காஷ்மீரம் ஆகிய பகுதிகள் வனப்பு வாய்ந்தவை; இயற்கை அன்னை எழிலைத் தோற்றுவித்து இன்பமூட்டும் இடங்கள்.

2. காஷ்மீரம் அவற்றுள் தலை சிறந்தது. அஃது ஒரு பள்ளத்தாக்கு; நான்கு புறங்களிலும் வானுற ஓங்கி வளர்ந்து, இமம் மூடிய பெருமலைகளால் சூழப்பட்டது; இமயமலையின் மேற்குப் பாகத்தில் அமைந்தது. 'இமம்' என்பது பனி. எப்பொழுதும் பனி மூடியிருப்பதால், அப்பெருமலை '**இமயம்**' என்றும், பனிக்கு உறைவிடமாய் இருப்பதால், 'இமாலயம்' என்றும் பெயர் பெறும். இமயம் இந்தியாவின் வடவெல்லையாயுள்ளது. உலகிலுள்ள உயர்ந்த மலைகளுள் அதுவும் ஒன்று.

3. காஷ்மீரம் சுதேச மன்னர் ஆளும் நாடு. அதனைச் சுற்றி நாற்புறத்திலும் அடுக்கடுக்காய் இமயமலை சூழ்ந்துள்ளது, பெருங்கோட்டை போன்றிருக்கும். அதனால், அத்தேசத்தின்மீது பகைவர் எளிதில் படையெடுத்துச் செல்லல் இயலாது; புயற்காற்றினாலும் அதற்குத் தீங்கு நேர்வதில்லை. காஷ்மீரம் கடல் மட்டத்திற்கு ஐயாயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது. அங்குக் குளிர் காலத்தில் குளிர் அதிகமே ஆயினும், கோடை காலத்தில் தட்பவெப்பநிலை சமமாகவே இருக்கும். **ஜீலம்** என்னும் நதி அந்நாட்டினிடையே பாய்ந்தோடி நாட்டை வளப்படுத்துகின்றது. அங்கு மழை தவருது பெய்கிறது. ஆதலால், காஷ்மீரம் நீர் வளமும், நிலவளமும் மிக்க நாடாகும்.

4. அலெக்ஸாண்டர் என்னும் பேரரசன் காலத்திலேயே (கி. மு. 327) சிறப்புற்று விளங்கிய தக்ஷசீலம் என்னும் செல்வமும் கல்வி வளமும் வாய்ந்த நகர் காஷ்மீரத்திலுள்ளதே. அது பத்துச் சதுரமைல் பரப்புள்ளதாய் விளங்கியது. அங்-

குப் பெரியதோர் சர்வகலாசாலை இருந்தது. இந்தியாவின் மற்றப் பாகங்களிலிருந்தும், இந்தியாவிற்குப் புறம்பான வெளி நாடுகளிலிருந்தும் மாணவர் பலர் அங்கு வந்து படித்தனர். மாணவர் ஆசிரியர்களோடு வதிந்தனர். அக்காலத்தில் பௌத்த மதத் துறவிகள் பலரும் அங்கிருந்தனர். அத்தகைய நகர் இப்பொழுது அழிந்து பாழடைந்துள்ளது.

5. காஷ்மீரத்தைச் சுற்றியுள்ள மலைகளில் வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்த பல்வேறு வகை மரங்கள் கண்களுக்கு இன்பக் காட்சி அளிக்கின்றன. மலைச் சரிவுகள் பசும்பட்டுப் போர்த்தாற்போலப் பசும்புற்றரையாற் பொலிந்து விளங்கும். ஆங்காங்கு ஆறுகளும், ஓடைகளும், அருவிகளும், ஏரிகளும் வெள்ளியென மின்னும் நீருடன் விளங்கும். மரம், செடி, கொடிகளிலெல்லாம் பல்வேறு வடிவு கொண்ட இலைகளும், பல நிறங்கள் கொண்ட மலர்களும் கண்களுக்கு அளவில்லா ஆனந்தத்தை அளிக்கும். பல தேசங்களிலுள்ள மக்கள் இவ்வியற்கை அழகைக் கண்டு களிக்க ஆண்டுதோறும் அங்குச் செல்கின்றனர்கள்.

6. காஷ்மீரம் பள்ளத்தாக்கில் அமைந்தது; மலைகளுக்கு நடுவில் உள்ளது. ஆதலால், அந்நாட்டிற்குச் செல்ல இருப்புப் பாதை வசதிகள் அமையவில்லை ; ஆயினும், நீண்ட சாலைகள் அமைந்துள்ளன. அவை பனியால் மூடப்பட்டிருக்கும். அந்நாட்டில் பழத் தோட்டங்கள் அதிகம். பல வகைப் பழங்கள் ஏராளமாகக் கிடைக்கும். அப்பழங்களை வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். நீர் வளமும் நிலவளமும் மிக்க அந்நாட்டில் நெல் நன்றாகப் பயிரிடப்படுகின்றது. ஏரிகளிலிருந்தும் ஆறுகளிலிருந்தும் வாய்க்கால்களால் வயல்களுக்கு நீர் பாய்ச்சப்படுகின்றது. நிலம் மங்கலான செந்நிறம் வாய்ந்தது. அந்நாட்டு மக்களுக்கு அரிசியே சிறந்த உணவாகும்.

7. காஷ்மீரிலுள்ள ஆடுகளின் உடலிலுள்ள உரோமத்தால் சால்வைகள் நெய்கிறார்கள். காஷ்மீர்ச் சால்வைகள் மிகவும் உயர்ந்தவை; நேர்த்தியானவை ; வழுவழுப்பானவை; குளிரை நீக்கத் தக்கவை. அச்சால்வைகளில் கைகளினால் அழகிய சித்திரப் பூ வேலைகளைச் செய்கிறார்கள். காஷ்மீர் மக்களுக்கு அத்தொழில் மிக்க ஊதியம் தருவதாகும். '**அக்குரோட்டு**' என்னும் மரம் அந்நாட்டில் மிகுதியாய் இருப்பதால், அம்மரத்தால் மேஜைகள், நாற்காலிகள், தட்டுகள் முதலியன செய்கிறார்கள். நெல் விளைவித்தல், பூ, பழங்கள் உண்டாக்கல் முதலானவைகளே அந்நாட்டு மக்களுக்கு மிக முக்கியமான தொழில்களாகும்.

8. காஷ்மீரம் மிகப் பழைய தேசமும், சரித்திரத்தில் சிறப்பாகக் குறிக்கப்படுவதுமாகும். **அசோகர்** இந்திய நாட்டுப் பேரரசருள் ஒருவர். அவர் காஷ்மீரத்தைக் கண்டு களித்துள்ளார். மொகலாய மன்னர்களும் ஆங்கு ஆண்டுதோறும் செல்வதுண்டு. அவர்களுள் **ஜஹாங்கீர்** அந்நாட்டிற்குச் செய்த நலன்கள் பல. மொகலாயர்கள் பல தோட்டங்களை அந்நாட்டில் உண்டாக்கினார்கள். அந்நாடு சீக்கியர் ஆதிக்கத்திலும் சிறப்புற்று விளங்கியது. சீக்கியர் தலைவரான **இரஞ்சித் சிங்கு** என்பவரும் அந்நாட்டிற்குப் பல நன்மைகளைச் செய்துள்ளார்.

9. காஷ்மீரத்தின் தலைநகர் ஸ்ரீநகர் என்பது. அங்கே தான் அந்நாட்டு வேந்தர் வசிக்கிறார். அது மிக்க வனப்பு வாய்ந்த நகர். அந்நகரில் சிறப்பு வாய்ந்த தால் ஏரி என்னும் ஏரி ஒன்று உள்ளது. அந்நகரில் வாய்க்கால் தெருக்களைப் போல விளங்குதலைக் காணலாம். மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் படகுகளிற் செல்வார்கள். தால் ஏரியில் மிதக்கும் தோட்டங்கள் உள்ளன. நாணற்குழாய்களை அடுக்கித் தட்டி போலக் கட்டி, அதில் மண்ணை நிரப்பி, எரு விட்டு, அதை நீரில் மிதக்க விடுவார்கள். அதில் தக்காளியும், வெள்ளரிக்காயும், முலாம்பழமும் பயிரிடப்படுகின்றன. இத்தகைய மிதக்கும் தோட்டங்களைக் காஷ்மீரிலுள்ள மற்ற ஏரிகளிலும் மிகுதியாகக் காணலாம். அவை நமக்கு இன்பத்தையும் வியப்பையும் தருவனவாகும்.

10. ஏரிகளில் படகுகள் மிதக்கும். தால் ஏரியிலுள்ள படகுகளுட்சில, வீடுகள் போல அமைந்திருக்கும். அவற்றில் பல அறைகளும் உள்ளன; எல்லா வித வசதிகளும் உள்ளன. அவற்றில் செல்வர் பலர் தங்கியிருப்பர். அப்படகு வீடுகள் மிதந்துகொண்டு ஏரியின் நடுவில் தங்கியிருக்கும். ஆறுகளிலும் இத்தகைய படகு வீடுகள் பலவற்றைக் காணலாம்.

11. கி. மு. 245ல் அசோகர் என்னும் பேரரசர் காஷ்மீரத்தைக் கண்டு களித்தார். அவர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்; ஆயினும், காஷ்மீரத்தில் பல கோயில்களைக் கட்டுவித்தார். கி. பி. 700ல் இலலிதாதித்தியன் என்னும் மன்னன் காஷ்மீரத்திற்குச் செய்த நலன்கள் பல. அவன் காஷ்மீரத்தில் வாய்க்கால்களும் பாலங்களும் உண்டாக்கினன். அவன் இந்தியாவின்மீதும் திபேத்தின்மீதும் படையெடுத்துச் சென்று, பொன்னும் பொருளும் கொண்டு வந்தான்; காஷ்மீரத்திலுள்ள கோயில்களைப் பொலிவுறச் செய்தான்; கவின்பெறு காஷ்மீராக்கினன். காஷ்மீரம் இந்தியாவின் மணிமுடியாய்ப் பொலிவும் புகழும் பெற்று விளங்குகிறது. நமது நாட்டுப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரூவின் முன்னோர்கள் காஷ்மீரத்தில் வாழ்ந்தவர்களே.

அரும்பதங்கள் : பொருள்கள் :

கவின்	இமம்	சரிவு	பாலங்கள்
எழில்	தட்பவெப்பம்	சால்வை	மணி முடி
வனப்பு	பொலிந்து	ஆதிக்கம்	சுந்தரம்

சிறு விடை வினாக்கள் :

1. நேப்பிள்ஸைப்பற்றி ஐரோப்பியர் கூறும் பழமொழி யாது?
2. 'உலகப் பூந்தோட்டம்' என்பது எது? ஏன்?
3. காஷ்மீரம் எத்தகையது?
4. இமாலயம்—பொருள் என்ன?
5. காஷ்மீரத்தின் இயற்கை அமைப்பைப்பற்றி எழுதுக.
6. காஷ்மீரத்தின் மக்களைப்பற்றி நீ என்ன அறிகிறாய்?
7. காஷ்மீரத்தில் உண்டாகும் பொருள்கள் யாவை?
8. சரித்திர சம்பந்தமாகக் காஷ்மீரத்தைப்பற்றி நீ என்ன அறிகிறாய்?
9. தால் ஏரி, படகு வீடுகள் என்பவை பற்றிக் குறிப்பு எழுதுக.
10. அசோகர், இலலிதாதித்தியன் என்பவர் செய்தவை யாவை?

கட்டுரைப் பயிற்சி :

1. சரித்திரப் பெருமை வாய்ந்த நகர் ஒன்றைப்பற்றிக் கட்டுரை எழுதுக.

2. நீ கண்ட நகரைப்பற்றி ஒரு வியாசம் எழுதுக.

3. நீ செய்த பிரயாணம் ஒன்றை விரித்து எழுதுக.

4. மதுரை, குற்றாலம், நீலகிரி, காஞ்சீபுரம், செஞ்சி, மகாபலிபுரம் என்பவற்றுள் ஒன்றை நீ கண்டு வந்து, அங்குக் கண்டவற்றைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

பயிற்சி—1

1. 'அழகே திரண்டு உருக் கொண்டாலென'—இதனை அமைத்து ஒரு வாக்கியம் எழுதுக.

2. 'தலைசிறந்தது'—இதனை அமைத்து ஒரு வாக்கியம் எழுதுக.

3. நாற்புறம், வானுற, வழுவழுப்பாக—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

4. 'தட்பவெப்ப நிலை' என்பது என்ன? இதனை வேறு எவ்வகையால் கூறலாம்?

பயிற்சி—2

1. கீழ் வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் வரைக:—
கவின், பொலிவுற, நேர்த்தி, ஆதிக்கம், வனப்பு.

2. அடுக்கடுக்காய், படிப்படியாய், வரிசை வரிசையாய், நேர்நேராய், எதிர்எதிராய்—இவைகளை அமைத்து வாக்கியங்கள் எழுதுக.

3. 'கி. பி. 700ல் இலலிதாதித்தியன் என்னும் மன்னன் காஷ்மீரத்திற்குச் செய்த நலங்கள் பல.'

இவ்வாக்கியத்தை வேறு எவ்வகையில் கருத்துக்கெடாமல் எழுதலாம்?

5. அசோகர்

1. இந்திய நாட்டின் பெருமைக்குக் காரணமாயிருப்பன இமயம் என்னும் மலையும், கங்கை முதலான புண்ணிய நதிகளுமேயாகும். இந்தியா நீர் வள நிலவளங்கள் நிறைந்தது; வாழ்க்கைக்கு மிகவும் பொருந்திய தட்பவெப்ப நிலையை உடையது.

2. இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்து ஆளவேண்டும் என்று விரும்பிய அரசர்களுள் அசோகரும் ஒருவர். அசோகர் மௌரிய வமிசத்தைச் சேர்ந்தவர். இந்தியாவை ஆண்ட பல அரச வமிசங்களில் மௌரிய வமிசமும் ஒன்று.

3. மௌரிய வமிசத்தில் **சந்திரகுப்தர்** என்பவர் மிகச் சிறந்த அரசர். மௌரிய அரசகுலத்தைத் தோற்றுவித்தவரும் சந்திரகுப்தரே. அவர் ஆண்ட நாடு **மகதநாடு**. அதன் தலைநகர் **பாடலிபுத்திரம்**; இக்காலத்தில் அதைப் **பாட்னு** என்பர். சந்திரகுப்தருக்குப் பின் அவர் புதல்வர் **பிந்துஸாரர்** என்பவர்

அரசரானர். தந்தையாரும் மைந்தரும் மகத தேசத்தைப் பெருகச் செய்தனர். பிந்துஸாரருக்குப் பின்னர் அவர் மைந்தர் அசோகர் அரசரானர்.

4. அசோகர் கி. மு. 273-ஆம் ஆண்டில் சிம்மாசனம் ஏறினர். அவர் அரியணை ஏறிய நாள் முதல் படை வலியைப் பெருக்குதலிற் கவனத்தைச் செலுத்தினர். படை வலி பெற்ற பின்னர்த் தம் சாம்ராஜ்யத்தைப் பரவச் செய்தலில் அவர் முழுக் கவனமும் சென்றது. அசோகர் அருகிலிருந்த நாடுகளின்மீதெல்லாம் படையெடுத்துச் சென்று, அந்நாடுகளைப் போரில் வென்று, கைப்பற்றித் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார். மன்னர் மண்மீது கொள்ளும் ஆசையே போருக்குக் காரணமாகும். மண்ணாசை பொல்லாதது. 'ஆசைக்கோரளவில்லை; அகிலமெல்லாம் கட்டியாளினும் கடல் மீதிலே ஆணை செலவே நினைவர்,' என்பது பொய்யாகுமோ?

5. அசோகரின் ஆசை ஒருவாறு ஓரளவு நிறைவேறியதென்றே கூறவேண்டும். தென்னிந்தியா நீங்கலாகப் பெரும்பகுதியான நாடுகளை அவர் வென்றார். ஏறக்குறைய இந்தியாவின் முக்காற்பகுதிக்கு அசோகர் பேரரசராய் விளங்கினர். அவர் வலிமையை அக்காலத்தில் யாவரும் அறிவர்.

6. அசோகர் கலிங்கநாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். கலிங்கநாட்டில் அவர் நடத்திய போர் மிகவும் கடுமையானது. அங்கு நிகழ்ந்த கொடுமைகள் பல; நகரங்கள் பல பாழாயின; கணக்கற்றவர் உயிர் இழந்தனர். இறந்த யானைகள் குதிரைகளுக்குக் கணக்கே இல்லை. நகரங்கள், கட்டடங்கள் யாவும் பாழாயின. அக்கொடிய போரினல் ஏற்பட்ட பொருள்களின் அழிவிற்கு வரம்பில்லை. வாழ்நாள் முழுவதும் போரானல், அது வெற்றி தருவதாயினும் வெறுப்பையும் தருமன்றே? கலிங்கப் போரினல் ஒரு பெரிய நன்மையும் ஏற்பட்டது; அசோகர் வெற்றி பெற்றார். ஆயினும், அவருடைய வீரர்கள் கலிங்க நாட்டுட்புகுந்து சூறையாடினர்கள்; கொலை புரிந்தார்கள்; கொள்ளையடித்தார்கள்; அழகமைந்த இடங்களைப் பாழாக்கினர்கள். அக்கொடிய செயல்-

களையெல்லாம் நேரிற்கண்ட அசோகர் மனம் மாறிவிட்டது. "நாடு பிடிக்க வேண்டும் என்னும் நமது பேராசை அன்றோ இவ்வளவு கொடுமைகளுக்கும் காரணமாயிற்று!" என்று எண்ணியெண்ணி அவர் வருந்தினர்; தாம் செய்த பாவங்களினின்றும் நீங்கும் வழியை நாடினர். கலிங்கப் போரோடு அசோகரின் போர்ச்செயல்கள் ஒழிந்தன. பின்னர் அவர் பிற நாடுகளை வெல்லக் கருதவில்லை. அவர் நினைத்திருந்தால், பின்னும் பல நாடுகளை வென்றிருக்கலாம். ஆனால், அவர் மனம் மாறிவிட்டதால், போர்த்தொழிலும் ஒழிந்தது.

7. அசோகருக்கு அரசச் செல்வத்திலும் வெறுப்புத் தோன்றியது. மக்களின் நலன் கருதி உழைக்கவும், சத்தியம், தருமம், அஹிம்ஸை என்பவற்றைக் கடைப்பிடித்தொழுகவும் அவர் எண்ணினர்; அதனால், புத்த மதத்தைத் தழுவி ஒழுகினர். அவரிடம் ஒரு பௌத்த முனிவர் வந்தார். **பால பண்டிதர்** என்பது அவர் பெயர். அவர் புத்தரின் அன்பு நெறியை அசோகருக்கு உபதேசித்தார். அதனால், அசோகரின் எண்ணங்களும் செயலும் மாறின. அசோகர் இந்தியா முழுவதும் அன்புநெறியான புத்த தருமத்தைப் பரப்ப எண்ணினர். அவர் புத்த தருமத்தைப் பரப்பச் செய்த முயற்சிகள் பல. அவருடைய சகோதரியும், மகளும், மகனும் புத்த தருமத்தைப் பரப்புதற்காகச் சீனா, ஜப்பான், இலங்கை, பர்மா, ஜாவா முதலான இடங்களுக்குச் சென்றனர். அங்கெல்லாம் புத்த மதம் பரவியது.

8. அசோகர் தம் தேசத்தில் பல இடங்களில் கல் தூண்களை நிறுத்தி, அவற்றில் புத்த மதக் கொள்கைகளைப் பொறித்து வைத்தார். கற்பாறைகளிலும், குகைகளிலும் புத்தமதக் கொள்கைகள் பொறிக்கப்பட்டன. அசோகர் பிரயாணத்திற்காகச் சாலைகளை அமைத்து, இரு பக்கங்களிலும் மரங்களை வைத்து வளர்த்தார்; மக்களுக்கும் மிருகங்களுக்கும் உண்டாகும் பிணிகளை நீக்க மருத்துவச் சாலைகள் பலவற்றை ஏற்படுத்தினர்; மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒழுக்க நெறிகளைக் கற்பாறைகளிலும் கல் தூண்களிலும் செதுக்கி வைத்தார். அவர் கட்டுவித்த சத்திரங்களும், வெட்டுவித்த குளங்களும் பல. அசோகரது பிற்கால ஆட்சி அருள்

ஆட்சியுாய் இருந்தது. அசோகர் நீதி நெறிப்படி வரி வாங்கினர். அசோகரது பிற்கால ஆட்சியில் மக்கள் அன்பு, அருள், சத்தியம், அஹிம்ஸை, தெய்வபத்தி, தருமம், இன்பம், முதலிய நற்பண்புகள் பொருந்தியவர்களாய் வாழ்ந்தார்கள்.

9. அவ்வாறே இக்காலத்தில் நாம் வாழவேண்டும் என்னும் நோக்கத்துடன் அசோக சக்கரத்தை நம் நாட்டுக்கொடியின் நடுவில் அமைத்துள்ளோம். கல் வெட்டுக்களில் ' **பிரியதரிசனி** ' என்று வழங்கப்பட்ட அசோகர், நாற்பது ஆண்டுகள் அரசாண்டு, கி. மு. 232ல் இறந்தார்.

அரும்பதம் : பொருள் காண்க :

வமிசம்	ஆணை	சூறையாடல்
சாம்ராஜ்யம்	தொடுப்பது	அஹிம்ஸை
கைப்பற்றி	வரம்பு	உபதேசித்தல்
அகிலமெல்லாம்	வெறுப்பு	செதுக்குதல்

சிறு விடை வினுக்கள் :

1. இந்தியாவின் பெருமைக்குக் காரணமாவன யாவை?

2. இந்தியாவிற்குப் பழம்பெயர் யாது ? அப்பெயர்க்குக் காரணம் யாது ?

3. அசோகர் எந்த வமிசத்தைச் சேர்ந்தவர் ?

4. அவருக்குத் தந்தையாரும் பாட்டனும் யாவர் ?

5. அசோகருக்கு இருந்த ஆசை யாது ? அவர் என்ன செய்தார் ?

6. ' கலிங்கப் போர் ' அசோகரின் இறுதிப் போர்.—இதை விளக்குக.

7. கலிங்கப் போருக்குப் பின் அசோகர் விரும்பியதென்ன? அதற்காக அவர் என்ன செய்தார் ?

8. புத்தமதத்தைப் பரப்ப அசோகர் செய்த முயற்சிகள் யாவை ? அம்மதம் எங்கெங்குப் பரவிற்று ?

9. அசோகர் நாட்டுமக்களுக்குச் செய்த நன்மைகள் யாவை?

10. அசோகருக்குக் கல் வெட்டிற்காணப்படும் பெயர் யாது? அவர் எத்தனை ஆண்டு அரசாண்டார் ? எப்பொழுது இறந்தார் ?

கட்டுரைப் பயிற்சி :

1. 'பண்டைக் காலப்போரும் இக்காலப் போரும்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. 'ஓர் அரசன் நாட்டிற்குச் செய்ய வேண்டிய நலன்கள்' என்பது பற்றி எழுதுக.

3. 'அசோகரும் கலிங்கப் போரும்'— என்பது பற்றி எழுதுக.

4. 'போரை வெறுத்த புரவலரின் செயல்' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதுக.

பயிற்சி—1

1. சீரும் சிறப்பும், பேரும் புகழும், நீர் வள நிலவளங்கள், உருவும் திருவும் — இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

2. 'அசோகர் மௌரிய வமிசத்தைச் சேர்ந்தவர்.'

இந்த வாக்கியத்தை வேறு எந்த விதமாகக் கருத்துக் கெடாமல் எழுதலாம்?

3. 'இமயம் முதல் குமரி வரை'— 'முதல் — வரை' என்பவற்றை அமைத்து இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

பயிற்சி—2

1. இந்தியாவில் ஆண்ட சில அரச வமிசங்களைக் குறிப்பிடுக.

2. தமிழகத்தை ஆண்ட அரச வமிசங்கள் யாவை?

3. போருக்குக் காரணம் யாது?

4. 'அவா'— இச்சொல்லை அமைத்து ஒரு வாக்கியம் எழுதுக.

பயிற்சி—3

1. போரினால் விளையும் கோரக் காட்சிகள் எவை?

2. மருத்துவச்சாலை — இக்கருத்தைத் தரும் வேறொரு சொல் தருக.

3. சில மதங்களின் பெயர்களைக் கூறுக.

4. நம் நாட்டுக் கொடியில் அசோக சக்கரத்தை அமைத்ததன் நோக்கம் என்ன?

6. மின்சாரம்

1. முற்கால வாழ்க்கை நிலை வேறு; இக்கால வாழ்க்கை நிலை வேறு. இரண்டிற்குமுள்ள வித்தியாசம் மிக அதிகம். அக்காலத்தில் காணாத பல அதிசயங்களும், வாழ்க்கையை எளிதும் இன்பமுமுடையதாக்குவனவாகிய பல பொருள்களும் இக்காலத்தில் உள்ளன. மக்கள் அறிவு நாளுக்கு நாள் வளர்ச்சியுறுகிறது. மக்கள் அறிவின் துணைக்கொண்டு ஐம்பெரும்பூதங்களையும் தங்களுக்குத் துணை செய்யத் தக்கனவாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள்; அதனால், பல நன்மைகளை அடைகிறார்கள்; புதிது புதிதாகப் பலவற்றைக் கண்டு பிடிக்கிறார்கள். அவை யாவும் வாழ்க்கையைச் சிறப்பிக்கப் பயன்படுகின்றன.

2. அறிவியற்கலையின் வளர்ச்சி வாழ்க்கைக்கு நலம் பல விளைப்பது என்பதை நாம் அறிகிறோம். அறிவும் ஆராய்ச்சியும் மனிதனுக்கு இன்றியமையாதவை. இறைவன் அளித்த அறிவை ஆராய்ச்சியிற்பயன்படுத்தாவிடின், மனிதன் தான் பெற்றதை இழந்தவன் ஆகின்றான். மனிதன் அறிவும் ஆராய்ச்சியும் கொண்டு, தன் வாழ்க்கை நலத்திற்காகக் கண்டு பிடித்தவற்றுள் **மின்சாரம்** என்பதும் ஒன்று. மின்சாரம் உயரிய நாகரிக இன்ப வாழ்க்கைக்கு மிகவும் பயன்படுகின்றது.

3. **அம்பர்** என்னும் ஒரு பொருளைத் தேய்த்தால், அதிலிருந்து ஒரு சத்தி உண்டாகிறது. மக்கள் ஒரு வகை மீன்களினிடத்தில் அச்சத்தி இருப்பதைக் கண்டார்கள். அச்சத்தி அருகில் வரும் மனிதரை நடுங்கும்படி செய்தது. அம்மீன்களுக்கு **டார்ப்பிடோ மீன்கள்** என்பது பெயர். மின்னலினிடத்தில் ஒளியுண்டாவதைக் காண்கின்றோம். மிக உயரமான இடத்திலிருந்து கீழே விழும் நீர் வீழ்ச்சிகளினின்றும் அச்சத்தியை உண்டாக்கலாம். நீர் வீழ்ச்சியின்கீழ்ச் சில இயந்திரங்களை அமைத்து, நீர் விழும் வேகத்தால் அவற்றை இயங்கச் செய்யலாம். அவ்வியந்திரங்களிலுள்ள காந்தத்தின் மூலம் அச்சத்தியைப் பெறலாம்; அச்சத்தியைச் சேமித்து

வைத்துப் பல வழிகளிலும் பயன் படுத்திக்கொள்ளலாம். அச்சத்திதான் **மின்சாரம்** என்பது.

4. மின்சாரத்தினுல் ஒளி, வெப்பம், இயக்கும் சத்தி என்ற மூன்றையும் பெறலாம். மழை காலத்தில் மின்னல் மின்னும் பொழுது பளீரென்று ஒளி உண்டாகின்றதன்ருே? அந்த மின்னல், மின்சாரமே. அதனுல், மின்சார சத்திகளுள் ஒன்று ஒளி என்பதை அறியலாம். மின்சாரத்தின் இயல்பு-களை ஆராய்ந்து அறிந்த அறிவியல் நுண்கலைஞர், மின்சாரத்-தைப் பல வழிகளிற் பயனுடையதாக்க முயன்றனர். அதனுல் விளைந்த நன்மைகள் பல. ஆகவே, மின்சாரம் மக்களுக்கு இந்நாளில் இன்றியமையாததாகிவிட்டது.

5. பதினெட்டாம் நூற்ருண்டில் மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்டு உலகிற்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்-னர் அறிஞர் பற்பலர் மின்சாரத்தைப் பற்றி மிகவும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களுடைய ஆராய்ச்சியின் பயனுல் மின்-சாரம் பற்பல அரிய செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. அதனுல் விளைந்த நலன்களும் பலவாம்.

6. இராக் காலங்களில் இருள் கவிந்துகொள்கின்றது. அப்பொழுது மக்கள் வெளிச்சத்தை நாடுகின்ருர்கள். அவர்-கள் விளக்குகளினுல் இருளைப் போக்கிக்கொள்கின்ருர்கள். மெழுகு வர்த்தி விளக்கும் மண்ணெண்ணெய் விளக்கும் நிறைந்த ஒளியைத் தருவனவல்ல. மற்றும் பரந்த இடத்திற்குப் பல விளக்குகளை அமைத்தலும் போதாது; தெளிவாக இருளும் நீங்காது. மின்சார விளக்குகள் மிகுந்த வெளிச்சம் தருவன ; அழகு செய்வன. அவை ஒளி தருதலால், பொருள்கள் தெளிவாகப் புலனுகின்றன. அவை பௌர்ணமிச் சந்திரனை ஒப்ப ஒளி வீசுகின்றன. தெருக்களிலும், சாலைகளி-லும் மிக்க வெளிச்சம் தரும் மின்சார விளக்குகள் இருத்த-லால், நாம் அச்சமின்றிச் செல்கின்ருேம். வீடுகளில் மின்சார விளக்குகள் ஒளி தந்து அழகு செய்கின்றன. விளக்கு எரிய மின்சாரம் தேவை.

7. வெயிற்காலத்தில் பகலிலும் இரவிலும் நமக்குக் காற்று வேண்டியிருக்கிறது. களைப்பை நீக்கிக்கொள்ளக்

காற்று வேண்டும். கை விசிறியால் எவ்வளவு நேரம் விசிறிக்கொள்ள முடியும்? மின்சார விசிறி, நல்ல காற்றைத் தந்து, களைப்பைப் போக்கி, ஊக்கத்தை அளிக்கிறது. வெயிலில்



நடந்து வந்தவர்கள் மின்சார விசிறியின்கீழ் அமர்ந்து களைப்பை ஆற்றிக்கொள்கின்றார்கள். விசிறி சுழல மின்சாரம் தேவை.

8. நாம் நெல், கோதுமை, அரிசி, மிளகாய், மஞ்சள், காப்பிக்கொட்டை முதலியவற்றை உபயோகிக்கின்றோம். நெல்லைக் குற்றி அரிசியாக்கவும், கோதுமையையும் அரிசியையும் மாவாக அரைக்கவும், மிளகாய் மஞ்சள் சீயக்காய் காப்பிக்கொட்டை இவற்றைப் பொடியாக அரைக்கவும் இயந்திரங்கள் உள்ளன. அவற்றை இயக்குவதும் மின்சாரமே.

9. நீர் இறைக்கவும், ஆடை துவைக்கவும், சமைக்கவும், வீட்டைச் சுத்தம் செய்யவும் மின்சாரம் மிகவும் பயன்படுகிறது. மின்சாரத்தினால் கிணற்று நீரை இறைத்துப் பயிர்த் தொழிலும் நடைபெறுகின்றது. நெடுந்தொலைவிலிருப்பவர்களோடு நேரில் பேசுவதுபோலப் பேச 'டெலிபோன்' என்னும் கருவி உபயோகப்படுகிறதல்லவா? அதுவும் மின்சாரத்தினால் இயல்வதே.

10. நாம் படக்காட்சி கண்டு மகிழ்கிறோம். அதற்கும் மின்சாரம் தேவை. நூல் நூற்கவும், ஆடைகள் நெய்யவும், காகிதம் செய்யவும், அச்சடிக்கவும் இயந்திரங்கள் உள்ளன. அவற்றை இயக்குவதும் மின்சாரமே. பெரிய தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வேண்டுவதாகும். மின்சார சத்தி இயந்திரங்களை இயங்கச் செய்து, பலர் பல நாள் செய்ய வேண்டுவதை விரைவில் சில மணி நேரத்தில் குறைந்த செலவில் செய்துகொடுக்கிறது.



11. மின்சாரத்தாலேதான் **வானொலி** என்னும் **ரேடியோ**வைக் கேட்டு மகிழ்கிறோம். வெவ்வேறு நகர்களில் நடைபெறும் பாட்டு, சொற்பொழிவு முதலியவற்றை உடனுக்குடன் நேரில் கேட்பது போலக் கேட்கிறோமல்லவா? பெரிய பட்டணங்களில் **மின்சார வண்டிகளும், மின்சார இரயில்களும்** உள்ளன. அவை மிக விரைவாகச் செல்கின்றன. அதனால், பெரிய பட்டணங்களில் வேலை பார்ப்பவர், அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் சிற்றூர்களிலும் வாழ்ந்து கொண்டு, மின்சார வண்டியிலும், மின்சார இரயிலிலும் அலுவலகம் சென்று வேலை பார்த்து வர இயல்கின்றது.

12. மின்சாரம் தெய்வ சத்திபோல நமக்கு அருமையான பணிகளைச் செய்கிறது. ஆனால், மின்சாரத்தினிடம்

நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மின்சாரம் நம்மைத் தாக்குமானல், நாம் இறந்துவிடுவோம். நோயை நீக்குதற்கும் மருத்துவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்து-கிருர்கள். பல வகையிலும் பயன்படுவதான மின்சாரம், நம் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாகும். அதனால், நாம் வாழும் இக்காலத்தை '**மின்சார யுகம்**' என்றே கூறலாம் அன்ருே?

அரும்பதம்: பொருள் காண்க:

வித்தியாசம்	நாகரிகம்	நுண்கலைஞர்
எளிது	நீர் வீழ்ச்சி	இன்றியமையாதது
பூதம்	இயங்குதல்	கவிந்துகொள்ளல்
அறிவியற்கலை	சேமித்து	தொழிற்சாலை

சிறு விடை வினுக்கள்:

1. முற்காலம், இக்காலம்—இவை வாழ்க்கையளவில் எவ்வாறு வேறுபடுகின்றன?

2. அறிவு எத்தன்மையது?

3. மக்கள் அறிவினுல் என்ன செய்துகொள்கிருர்கள்?

4. 'அறிவியற்கலையும் வாழ்க்கையும்' என்பது பற்றி நீ அறிவது என்ன?

5. மக்கள் முதலில் மின்சாரத்தை எவற்றில் கண்டார்கள்?

6. மின்சாரம் எவ்வாறு உண்டாக்கப்படுகிறது?

7. மின்சாரத்திற்குள்ள சத்திகள் எவை?

8. மின்சாரம் இக்காலத்தில் எவற்றிற்கெல்லாம் பயன்படுகிறது?

9. தென்னிந்தியாவில் மின்சாரம் எங்கெங்கு உண்டாக்கப்படுகிறது?

10. 'மின்சார யுகம்' என்பது நமது காலத்திற்கு எப்படிப் பொருந்தும்?

கட்டுரைப் பயிற்சி :

1. 'மின்சாரமும் தொழிற்சாலைகளும்' என்பது பற்றி எழுதுக.

2. பயிர்த்தொழிலுக்கு மின்சாரம் எவ்வாறு பயன்படும் என்பது பற்றி எழுதுக.

3. 'மின்சாரம் மக்கள் வாழ்க்கையை இலகுவாக்குகிறது.'—எப்படி?

4. 'மின்சாரம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அவசியம்,'—விளக்குக.

பயிற்சி—1

1. இப்பாடத்தில் வந்துள்ள படங்களைப் பார்த்து, அவற்றுள் ஒவ்வொன்றைப் பற்றியும் இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுதுக.

2. வித்தியாசம்—இதற்கு மறு சொல் தருக.

3. அக்காலம்—எதிர்ப்பதம் யாது? இரண்டையும் அமைத்து ஒரு வாக்கியம் எழுதுக.

4. ஐம்பெரும்பூதங்கள் எவை? புதிது புதிதாக—இதனை அமைத்து ஒரு வாக்கியம் எழுதுக.

பயிற்சி—2

1. 'மனிதன் பெற்றதை இழந்தவன் ஆவான்.'—எப்பொழுது?

2. கை விசிறியால் எவ்வளவு நேரம் விசிறிக்கொண்டிருக்க முடியும்?—இது என்ன வாக்கியம்? இதனைச் சாதாரண வாக்கியமாக மாற்றுக.

3. ஒலி, ஒளி, ஒழி—இவற்றின் பொருள் வேற்றுமை விளங்க வாக்கியங்கள் எழுதிக் காட்டுக.

4. ரேடியோவினால் விளையும் நன்மைகளை எழுதுக.

5. இராக்காலம்—எதிர்ப்பதம் தருக.

பயிற்சி—3

1. 'நீர் வீழ்ச்சி' என்பது என்ன? அதனால் விளையும் நன்மை யாது?

2. 'மின்சாரம் தீமையையும் விளைக்கும்.'—எப்படி?

3. சேர்த்து எழுதுக :—

(1) சிறு + ஊர் =
சிறு + ஆறு =

(2) முதுமை + ஊர் =
பசுமை + இலை =

பயிற்சி—4

1. மார்க்கோனி, தாமஸ் ஆல்வா எடிஸன் என்பவர்களைப் பற்றி நூல் நிலையப் புத்தகங்களில் படித்து அறிந்துகொள்க. அவ்விருவரும் மின்சாரத்திற்கு எவ்வாறு ஏற்றம் அளித்தனர்?

2. நம் நாட்டில் விளங்கியவரும் விளங்குபவருமான அறிவியற்கலைஞர் யாவர்? அவர்களைப்பற்றி நீ என்ன அறிந்துள்ளாய்?

3. ஆகாய விமானிகளுக்கும், கப்பலோட்டுபவர்க்கும், மருத்துவர்க்கும் மின்சாரம் எவ்வாறு பயன்படுகிறது?

7. மானம் காத்த மன்னன்

1. மக்களுக்கு மானமே சிறந்தது. மானம் என்பது நிலையில் தாழ்ந்துவிடாமலிருப்பதும், தெய்வ வசத்தால் தாழ்வு வந்தால் உயிர் வாழாமலிருப்பதும் ஆகும். 'மானம் பட வரின் வாழாமை முன்னினிதே,' என்றார் ஒரு புலவர். 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்,' என்றார் திருவள்ளுவர். மானில் ஒரு வகையான கவரிமான், தன் உடலிலுள்ள மயிரை இழந்தால், உயிரை விட்டுவிடுமாம். மானமே உயிர். ஆதலின், திருவள்ளுவர் தம் திருக்குறளில் '**மானம்**' என்னும் ஓர் அதிகாரம் அமைத்துப் பத்துக் குறள்களைக் கூறியுள்ளார்.

2. தமிழகத்தைச் **சேர, சோழ, பாண்டியர்** என்னும் மூவேந்தர் முன்பு ஆண்டனர். ஒருகால் சேர நாட்டில் **சேரமான் கணைக்காலிரும்பொறை** என்னும் சேர வேந்தன் ஒருவன் இருந்தான். அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; வீரத்தில் மிகுந்தவன்; சிறந்த தமிழறிவு உடையவன்; ஆதலால், தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தான். அவன் அவைக்களத்தில் **பொய்கையார்** என்ற சிறந்த புலவர் இருந்தார். பொய்கையார் **கணைக்கால் இரும்பொறைக்கு** ஆசிரியரும் ஆவர்.

3. சேரமான் கணைக்காலிரும்பொறை மானமே உயிர் என மதிக்கும் தன்மையுடையவன்; பல அரசர்களோடு போர் புரிந்து வெற்றி பெற்றவன். அவன் பொய்கையாரிடம் பாடம் கேட்டும் அளவளாவியும் பேரறிஞனாய் விளங்கினான். அவனுக்குச் செய்யுள் இயற்றுவதிலும் நல்ல பயிற்சியுண்டு. பொய்கையாரும் கணைக்காலிரும்பொறையும் கொண்டிருந்த அன்பிற்கு ஓரளவில்லை.

4. அக்காலத்தில் சோழ நாட்டில் **செங்கணான்** என்னும் சோழன் அரசனாய் இருந்தான். அவனும் வீரன்; தமிழறிவும் வாய்ந்தவன். சேரனுக்கும் சோழனுக்கும் போருண்டாயிற்று. அப்போர், **கழுமலம்** என்னும் இடத்தில் நடந்தது.

அப்போரில் சேரனுக்குத் துணையாய் **நன்னன், அத்தி, கங்கன், எருமையூரன்** என்னும் குறுநில மன்னர்கள் வந்தார்கள். சோழன் செங்கணனுக்குப் **பழையன் மூவன்** என்பானைத் தவிர, வேறு யாருமில்லை. போரில் பழையன்மூவனைக் கணைக்காலிரும்பொறை கொன்றுவிட்டான்; அதனோடு நில்லாது, பழையன்மூவன் பல்லைப் பிடுங்கிச் சேரன் தன் தொண்டிநகர்க் கோட்டைக்கதவில் அழுத்தி வைத்தான். இச்செயல் பழையன்மூவனை அவமானப்படுத்தியது போன்றதன்றோ?

5. பழையன்மூவன் போரிற் கொல்லப்பட்டதையும், இரும்பொறை அவனை அவமானப்படுத்தியதையும் கேட்ட செங்கணன், சீற்றம் மிகக் கொண்டான்; தன் நண்பனுக்கு நேர்ந்த அவமானத்தைத் தனக்கு நேர்ந்ததாகவே எண்ணினான்; போர்க்களம் குறுகினான். பகைவர்மீது சிங்கம்போலப் பாய்ந்தான். கடும்போர் நடந்தது. சேரனுடைய படை வீரர் எதிர்த்துப் போர் புரிய இயலாது ஓட்டமெடுத்தனர். சேரமான் கணைக்கால் இரும்பொறை போரில் சிறை பிடிக்கப்பட்டான். சோழன் சேரனைச் சிறையில் அடைத்தான்.

6. சேரன் சிறைப்பட்டான் என்பதை அறிந்தார் பொய்கையார்; அவனை விடுவிக்க எண்ணினார். அவர் கழுமலப் போரையும் செங்கணன் வெற்றியையும் சிறப்பித்துக் **களவழி நாற்பது** என்னும் நூலைப் பாடினார்; அந்நூலை எடுத்துக்கொண்டு சோழன் செங்கணனை அடைந்தார். செங்கணன் புலவரை அன்புடன் வரவேற்று உபசரித்தான். புலவர் தம் நூலைப் படித்து விளக்கினார். செங்கணன் புலவரின் கவிநயம் கண்டு வியந்தான். அவன் புலவரை நோக்கி, "புலவரே, உமக்கு வேண்டுவது யாது? எது கேட்பினும் தருவேம்," என்றான். புலவர், 'அரசரே, யாம் பொன்னை வேண்டியோ, புகழை வேண்டியோ உம்மைப் புகழவில்லை; எம்மன்னன் கணைக்காலிரும்பொறையைச் சிறையினின்றும் விடுதலை செய்ய வேண்டும்," என்றார்.

7. உயிரனைய தன் நண்பனை அவமானப்படுத்திய பகைவனையா சிறையினின்றும் விடுவிப்பது! சோழனுக்கு

நண்பனை நினைக்கும்பொழுதெல்லாம் கணைக்காலிரும்பொறையின்மீது ஆருச்சினம் எழும். ஆயினும், புலவர்க்கு யாது வேண்டினும் தருவதாகக் கூறிய வாக்கினைப் பொய்யாக்கலாமோ? கூடாதல்லவா? ஆதலால், சோழன் இருதலைக் கொள்ளியின் இடைப்பட்ட எறும்பு போலத் தவித்தான். 'சொன்னசொல் தவறலாகாது,' என்பதை நினைக்க நினைக்கச் சோழன் கோபம் தணிந்து வந்தது. அதனால், சோழன் செங்கணான் கணைக்காலிரும்பொறையைச் சிறையினின்றும் விடுதலை செய்தான்; அரசினையும் அளித்தான். புலவர் பொய்கையார் மனம் மிக மகிழ்ந்தார்; சேரன் கணைக்காலிரும்பொறையோடு சேரநாடு போய்ச் சேர்ந்தார்.

8. சேரன் தன் நாட்டை அடைந்தும், அவன் மனம் அமைதியை அடையவில்லை. தான் பிறரால் மீட்கப்பட்டு வெளி வந்ததை எண்ணிக் கணைக்காலிரும்பொறை மனம் நொந்தான். அவமானம், இழிவு, வருத்தம் யாவும் ஒன்று சேர்ந்து அவனை வருத்தின. அவன் தனக்கு நேர்ந்த இழிவைப் போக்க எண்ணினான்; 'மானம் இழந்து வாழ்தலினும், போரில் இறப்பது மேலானது!' என்று எண்ணி, பெரும்படை திரட்டிக்கொண்டு, சோழனை எதிர்க்கச் சென்றான். சோழன் போருக்கு அஞ்சுவானோ? அவனும் பெரும்படையுடன் வந்து எதிர்த்தான். கடும்போர் நடந்தது. சோழன் வெற்றி பெற்றான். போரில் கணைக்காலிரும்பொறை மீண்டும் சிறை பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைபட்டான்.

9. கணைக்காலிரும்பொறை மனம் நொந்து தவித்தான்; மணியை இழந்த நாகம் போல வருந்தினான்; உணவையும் நீரையும் மறந்தான். 'மானம் பட வந்த பின் வாழ்க்கை எதற்கு?' என எண்ணினான்போலும்! அவன் நொந்து வருந்தும் நிலையில் தேற்றுவார் அங்கு யார்? சேரன் களைப்புற்றான். நாவறண்டது; சோர்வு உண்டாயிற்று. சிறை காப்பாளர் நிற்பதைக் கண்டான்; சிறிது நீர் பெற்றுப் பருகிக் களைப்பை ஆற்றிக்கொள்ள எண்ணினான். அவன் காவலருள் ஒருவனை நோக்கி, "நா வறண்டுள்ளது; பருக நீர் கொண்டு வா," என்றான். சிறைப்பட்ட நிலையிலும் அவன் மிடுக்காக மொழிந்-

தான். அவன் வார்த்தைகளில் பணிவு தோன்றவில்லை. அரசன் அன்றோ அவன்! சிறை காவலனுக்கு அவன் அரசனானால் என்ன? அவன் கோபம்கொண்டு சிறிது காலம் தாழ்த்து நீர் கொணர்ந்தனன். நீரைக் கொடுக்கும்பொழுது காவலன் அரசனாயிற்றே என்று பணிவு காட்டவில்லை. அச்செயல் சேரன் நெஞ்சைப் பிளந்தது. 'சிறைப்பட்டமையால் அன்றோ இந்த இழிவு!' என்று சேரன் எண்ணினான். அவன் அந்நீரைப் பருக மனம் கொள்ளவில்லை. 'நீரைக் குடித்து உயிர் வாழ்தலினும், இழிவு வந்த பின் இறப்பதே நல்லது!' எனத் துணிந்தான்; 'இரும்புச் சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய்போலச்

சிறைக்குள் இருந்துகொண்டு நீரைக் குடித்து உயிர் வாழ்தல் வீரர்க்கு அழகுமன்று; ஆண்மையுமன்று,' என்று எண்ணினான்; நீரை வாங்கிக் கீழே ஊற்றினான்; மானமே பெரிது என மதித்து உயிரை விட்டான். மானத்தைக் காக்க உயிரை விடுத்த அவ்வேந்தன் உயிர் விடுமுன் பாடிய பாடல், அவனது புலமையையும் உணர்ச்சியையும் நன்கு விளக்குவதாயுள்ளது. அச்செய்யுள் புறநானூறு என்னும் சங்கத் தொகை நூலில் உள்ளது.

அரும்பதம் : பொருள் காண்க :

மானம்	அவைக்களம்	உபசரித்தல்	தணிதல்
தெய்வவசம்	அளவளாவுதல்	வியத்தல்	தவித்தல்
குறள்	அவமானம்	வாக்கு	தேற்றல்
ஒருகால்	சீற்றம்	இழிவு	பணிவு

சிறு விடை வினாக்கள் :

1. 'மானம்' என்பது யாது ?

2. கவரி மானின் இயல்பு யாது ?

3. பொய்கையார் யார் ? அவர் பாடிய நூல் யாது ?

4. சேரன் கணைக்காலிரும்பொறையைப் பற்றி நீ அறிவதென்ன ?

5. சேரமானின் எச்செயல் சோழனைப் போருக்கு இழுத்தது ?

6. பொய்கையார் சேரமானை எவ்வாறு சிறையினின்றும் விடுவித்தார் ?

7. 'களவழி நாற்பது' எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது ?

8. 'சோழன் வாக்குத் தவறாதவன்.' — விளக்குக.

9. 'மானமே பெரிதெனச் சேரன் மதித்தான்.'—விளக்குக.

கட்டுரைப் பயிற்சி :

1. 'சேரனும் பழையன் மூவனும்' என்னும் தலைப்புக் கொடுத்து, நீ அறிந்ததை எழுதுக.

2. 'பொய்கையாரும் சோழனும்' என்ற தலைப்பின்கீழ் நீ அறிந்தவற்றை எழுதுக.

3. 'சேரன் வீரமும் மானமும்' என்ற தலைப்பில் கணைக்காலிரும்பொறையைப் பற்றி நீ அறிந்ததை எழுதுக.

பயிற்சி—1

1. 'மானம் படவரின் வாழாமை முன்னினிதே.' — இந்த அடி எந்த நூலில் உள்ளது ? இதன் அர்த்தம் என்ன ?

2. 'படுதல்' என்ற சொல் என்ன பொருளில் வந்துள்ளது? அப்பொருளில் அச்சொல்லை அமைத்து ஒரு வாக்கியம் எழுதுக.

3. சேர சோழ பாண்டியர்களின் தலை நகர்கள், கொடிகள், அவர்கள் நாட்டு ஆறுகள், மலைகள் என்பவற்றைப்பற்றி எழுதுக.

4. (1) 'இருதலைக் கொள்ளியின் இடைப்பட்ட எறும்பு போல'

(2) 'மணி இழந்த நாகம் போல'

இப்பழமொழிகளை விளக்குக. இவை வந்துள்ள சந்தர்ப்பத்தைக் கூறுக.

பயிற்சி—2

1. மானம், வானம், தானம், கானம், பானம்—இவற்றின் பொருள் என்ன?

2. ஆகாயத்தைக் குறிக்க மானம், வானம் என்ற சொற்களில் எது சரி? எது தவறு? ஏன்?

3. ஒருகால், அவைக்களம், அளவளாவுதல் — இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

பயிற்சி—3

1. 'சொன்ன சொல் தவறலாகாது.'— இக்கருத்து இப்பாடத்தில் எந்நிகழ்ச்சியால் விளக்கப்படுகிறது?

2. 'நட்பின் சிறப்பு' என்ற தலைப்பை விளக்க நீ எந்த நிகழ்ச்சியை இப்பாடத்திலிருந்து எடுப்பாய்?

3. சேரன் புலமை அல்லது கவி பாடும் திறமை உடையவன் என்பதை நீ எவ்வாறு அறிவாய்?

8. சந்தன மரம்

1. காடுகளில் பல வகை மரங்கள் இருக்கின்றன. அவற்றுள் சந்தனமும் தேக்கும் மிகச் சிறந்தவை. சில மரங்களுக்கு மணம் உண்டு. மணம் மிக்க மரங்களுள் தலை சிறந்தது சந்தன மரம். வெப்பம் மிக்க நாடுகளிலேதான் சந்தன மரம் செழிப்பாய் வளரும். இந்தியாவில் மதனபள்ளி, கர்நூல், கடப்பை, மைசூர் என்னும் இடங்களில் சந்தன மரம் ஏராளமாய் உண்டு.

2. சந்தன மரம் இந்திய நாட்டிற்கு உரியது. பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் சந்தன மரம் உண்டு என்பதும், அதனைப் பிற நாட்டரசர்கள் மணத்தின்பொருட்டு வாங்கிச் சென்றார்கள் என்பதும் நாம் அறிகிறோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்குச் சந்தன மரம் ஏற்றுமதியாயிற்று என்பதற்குச் சரித்திரத்தில் ஆதாரங்கள் உள்ளன. முத்தும் சந்தனமும் தமிழ் நாட்டுக்கு உரியவை என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன.



3. சந்தன மரம் அதிக விலை மதிப்பு உடையது. காட்டு இலாக்காவின் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்குச் சந்தன மரமும் காரணமாகும். அதனால், இம்மரத்தின் உரிமை அரசாங்கத்திற்கே உரியது. இம்மரம் இருபதடி உயரமே வளரும்; ஐம்பது வருடங்கள் வளர்ந்தாலும் அவ்வளவுதான் வளரும்; மிகத் தாமதமாயும் வளரும்.

இதன் சுற்றளவும் மூன்றடிக்கு மேல் இராது. இம்மரத்தின் கிளைகளும், இலைகளும், பூக்களும் மணமுடையனவல்ல. இம்மரத்தின் மேற்பட்டைக்கும் மணமில்லை. நாற்பதாண்டு வளர்ந்த மரங்களின் உள் வயிரமே மணமுள்ளதாய் இருக்கும். இளமரங்களின் கட்டைகளுக்கு மணமில்லை. வேரும், வேர்ப்பக்கத்திலுள்ள அடி மரமுமே மற்றப் பகுதிகளினும் மணம் மிகுந்தனவாகும். பல நாடுகளில் சந்தன மரங்கள் இருப்பினும், அவை யாவும் ஒரே வகையான மணமுடையன அல்ல. நாட்டின் தட்பவெப்ப நிலைக்குத் தக்கபடி மணம் அமைந்திருக்கும். மலேயா நாட்டில் இப்பொழுது சந்தன மரங்கள் வளர்க்கப்படுகின்றன. அவை நம் நாட்டில் இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றின் மணம் குறைவானதே. அதிக மழை இல்லாமலும், இரவுப் பொழுது குளிர்ச்சியாயும் இருக்குமிடங்களில் சந்தன மரங்கள் செழித்து வளரும். எந்நாட்டு மரங்களினும் மைசூர் மரங்களே மணத்தில் மிக்கவை.

4. சந்தன மரம் பிற மரங்களைச் சார்ந்து வளர்வது. அது கள்ளிப் புதர் போன்ற வேலியோரங்களில் வளரும். மற்றச் செடி கொடிப் புதர்களுக்கு இடையில் வளரும் சந்தன மரம், பூமியின் சத்து மிக்குள்ள இடத்தில் எருவிட்டு வளர்த்தாலும் வளராது பட்டுப்போகும்; கூட்டமாக வளர விட்டால், புழு, நோய் முதலியவற்றால் அழிவுறும். பூமியில் சாரம் அதிகம் இல்லாத இடத்தில், செம்மண் தரையில், நீர் வறண்ட இடத்தில், இது செழித்து வளரும் இயல்புள்ளது; தோட்டமாக வைத்து வளர்த்தால், அறுபதாண்டுகளுக்குப் பின்னரே பலன் தரும். சந்தன மரத்தின் விதையையூன்றி, நாற்று விட்டு, நாற்றைப் பிடுங்கி நட்டும் வளர்ப்பர். சந்தன மரத்தின் பழங்கள் களாப்பழங்கள் போன்றிருக்கும். அவை மரத்திலிருந்து விழுந்து தாமாக முளைத்துச் செடியாகிப் பின்பு மரமாதலே இயல்பு. நாற்று நடுவதானால், பதினைந்தடித் தூரத்திற்கு ஒன்றாக, மூன்றடி நீளமும் மூன்றடி ஆழமுமுள்ள குழியில் நடுதல் வேண்டும். காட்டாமணக்குச் செடியை அருகில் நட்டால், அதன் நிழலில் சந்தனச் செடிகள் வளரும். வாரத்திற்கு இரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். எப்படி-

யும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரே இதை வேரோடு வெட்டிப் பயன்படுத்தலாகும்.

5. ஐம்பது அறுபது ஆண்டுகள் வளர்ந்த சந்தன மரத்தில் ஐம்பது வீசைச் சந்தனக் கட்டை கிடைக்கும். சந்தனக் கட்டை மிகவும் கனமுள்ளது: தண்ணீரில் மிதக்காது அமிழ்ந்துவிடும். ஒரு கன அடிச் சந்தனக் கட்டை அறுபது இராத்தல் இருக்கும். இம்மரத்தைப் பூச்சிகள் அரிக்க மாட்டா ; கறையானும் தின்னாது.

6. சந்தன மரத்தால் கைத்தடி, சிமிழ், பெட்டி, சீப்பு, பொடி டப்பி, சிறு பொம்மைகள் முதலியன செய்வர். சந்தனக் கட்டையிலிருந்து அத்தர் எடுக்கலாம். நூறு வீசைக் கட்டையிலிருந்து ஏழு வீசை அத்தர் கிடைக்கும். பிரான்ஸ், ஜெர்மனி நாட்டு வியாபாரிகள் அதிக விலை கொடுத்துச் சந்தனக்கட்டையை நம் நாட்டிலிருந்து வாங்கிச் சென்று, அத்தர் செய்து, நம் நாட்டுக்கு அனுப்புகிறார்கள். மைசூர் அரசாங்கத்தார், சந்தன அத்தர் செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளனர். பழைய முறைப்படியும், இயந்திரங்களைக் கொண்டு ரஸாயன முறைப்படியும் அத்தர் செய்யலாம். இங்கிலாந்தில் ஓர் இராத்தல் அத்தர் மூன்று பவுன் விலைக்கு விற்கப்படுகிறது.

7. சந்தன மரம் சிறியதாய் இருக்கும் பொழுது சிறிது பட்டாலும் வளர்ச்சியில் குன்றும்; மணத்திலும் குன்றும். தைலச் சத்துள்ள மரம் ஆதலின், பச்சை மரங்களிலும் தீப் பற்றிக்கொள்ளும். ஆதலால், சந்தன மரத்தைக் கவனத்துடன் காப்பாற்ற வேண்டும். சந்தனத்தை அரைத்துக் கலவைச் சந்தனமாக்கிப் பூசிக்கொள்வது நம் நாட்டு வழக்கம். சந்தனத்தை அரைத்துப் பன்னீரில் கரைத்து இறைவனுக்கு அபிடேகம் செய்வர். சந்தனத்தை உடலில் பூசிக்கொள்வதால், உடம்பு குளிர்ந்து, உண்ட உணவு விரைவில் ஜீரணமாகும். சுரம் முதலானவைகளுக்குச் சந்தனப் பொடியால் செய்த கஷாயம் அளிப்பர். தோலின்மேல் தோன்றும் சொறிச் சிரங்குகட்குச் சந்தன அத்தரைத் தடவுவர். சந்தன அத்தர்

தடவினுல் வேர்க்குரு நீங்கும். உடலின் சூட்டைத் தணிக்கச் சந்தனுதித் தைலத்தைத் தேய்த்து மூழ்குதலும், சந்தனச் சத்தை உட்கொள்ளுதலும் உண்டு. சந்தனுதித் தைலம், சந்தனவடி, சந்தன மாத்திரை, சந்தன இலேக்கியம், சந்தன மேற்பூச்சு, சோப்பு முதலியன வைத்திய முறையில் சந்தன மரத்தைக்கொண்டு செய்யப்படுவன. சந்தனமும் அத்தரும் தலை வலிக்கு மருந்தாகும். நம் நாட்டு வைத்தியமான ஆயுர் வேத முறையில் சந்தன மரம் பல வகையில் உடம்பின் குளிர்ச்சிக்கு மருந்துகள் செய்யப் பயன்படுகிறது.

அரும்பதம் : பொருள் காண்க :

மணம்	வருமானம்	கலவை
ஏராளமாக	சுற்றளவு	அபிடேகம்
ஏற்றுமதி	கனம்	கஷாயம்
உரியவை	வயிரம்	அத்தர்

சிறு விடை வினுக்கள் :

1. சந்தன மரம் இந்தியாவில் எங்கெங்குக் கிடைக்கின்றது ?
2. சந்தன மரம் அரசாங்கத்திற்கே உரியது.—ஏன் ?
3. சந்தன மரம் வேறெங்கேனும் காணப்படுகின்றதா ?
4. சந்தன மரம் எங்கு வளரும் ?
5. சந்தன மரத்தால் செய்யப்படுவன எவை ? ஏன் ?
6. நாம் சந்தனம் பூசிக்கொள்வது ஏன் ?
7. சந்தன மரத்திஞல் உண்டாகும் பயன்கள் எவை ?

கட்டுரைப் பயிற்சி :

1. 'மரங்களும் பயன்களும்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. ஆல், வேம்பு, தென்னை, மா, பலா, தேக்கு என்னும் மரங்களுள் மூன்றைப் பற்றி எழுதுக.

3. 'காடுகள்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

பயிற்சி—1

1. மணம்—இரு பொருள் தருக.

2. ஏற்றுமதி—எதிர்ப்பதம் யாது? இரண்டையும் வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

3. வருமானம்—இப்பொருளில் வரும் வேறொரு சொல் யாது?

4. கஷாயம், காஷாயம்—இவற்றின் அர்த்தபேதமென்ன?

பயிற்சி—2

1. ஏராளமாக—எதிர்ப்பதம் எழுதுக.

2. கனம், கணம்—பொருள் வேற்றுமை என்ன?

3. 'புதர்' என்பது என்ன?

4. சேர்த்தெழுதுக :—

நாடு + அரசர் = நாட்டரசர்
நாடு + ஆட்சி =
காடு + அரண் =
வீடு + அகம் =
மேடு + நிலம் =
கூடு + பறவை =

பயிற்சி—3

1. காட்டாமணக்கு, காட்டிலாக்கா — பிரித்து எழுதுக.

2. 'சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைபடாது.'—இதன் பொருளை எழுதுக.

3. 'பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் : நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.'
—அர்த்தம் எழுதுக.

சின்னம்பட - உருவு அழிய ; நலிந்தாலும் - வருத்தப்படுத்தினும்.

9. கிராமமும் கைத்தொழில்களும்

1. இந்தியா ஒரு விவசாய நாடு. இந்தியாவின் உயிர் நாடி கிராமங்களே. முன்பு பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வசித்து வந்தார்கள்; இக்காலத்திலும் வசித்து வருகின்றார்கள். ஆனால், இக்காலத்தில் கிராமங்கள் மிகவும் இழிந்த நிலையில் உள்ளன. முன்பு கிராமங்களே இந்தியாவின் செல்வ நிலைக்கு அடிப்படையாய் இருந்தன. ஆனால், இக்காலத்தில் கிராமங்கள் சீரழிந்து கிடக்கின்றன. இந்தியாவில் முன்பு மக்கள் தொகை குறைவு; இக்காலத்தில் மக்கள் தொகை அதிகம். இந்தியாவில் நகரங்கள் பெருகலாயின.

கிராமங்களில் இருந்த மக்கள் நகரங்களை நோக்கி வந்தார்கள். கிராமங்களில் பெரும்பாலும் கிழவர்களும், எளியவர்களும், நோயுற்றவர்களுமே உள்ளார்கள். ஆதலால், கிராமங்கள் சீர்கேடுற்றன.

2. இந்நிலை ஏற்படக் காரணம் என்ன? பயிர்த்தொழிலாளர்களான கிராம மக்களுக்கு வருவாய் போதவில்லை. பயிர்த்தொழிலில் அவர்களுக்கு ஆறு மாதங்களே வேலை உண்டு; மற்ற ஆறு மாதங்களை அவர்கள் வீணே கழிக்க வேண்டியவர்களாயுள்ளார்கள். ஆறு மாதப் பயிர்த்தொழிலால் பெற்ற ஊதியத்தைக்கொண்டு கிராம மக்கள் ஆண்டு முழுவதும் வாழ்க்கையை நடத்த இயலவில்லை. நகரங்களில் சென்றால் தொழிற்சாலை, வர்த்தக இடங்கள், அரசாங்க அலுவலகங்கள் முதலியவற்றில் வேலைக்கு அமர்ந்து பொருள் சம்பாதிக்கலாம்; குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கலாம்; நாகரிகமுறலாம்; கூலி வேலை செய்யினும் கையில் பொருள் கிடைக்கும். எத்தகையவனுக்கும் நகரங்களில் வேலை கிடைக்கிறது; வாழ்க்கையை நடத்த முடிகின்றது. எனவே, கிராம

மக்கள் நகரங்களில் குடியேறலானார்கள். அதனால், கிராமங்கள் குன்றலாயின.

3. நகரில் கிடைக்கும் வசதிகள் கிராமங்களில் இல்லை. கிராமங்களில் நல்ல சாலைகள் இல்லை; தெருக்கள் இல்லை; சிறந்த வீடுகள் இல்லை; வசதியான நீர் நிலைகள் இல்லை; எங்கும் வயல்களும் தோட்டங்களுமே உள்ளன. சுகாதார வசதிகள் கிராமங்களில் இல்லை. பிணியாளர்க்கு மருத்துவ நிலையங்கள் இல்லை. கிராம மக்களின் குழந்தைகளுக்குக் கல்விக்குரிய பள்ளிக்கூடங்கள் இல்லை. போக்கு வரவு வசதிக் குறைவால் மற்ற மக்களுடைய தொடர்பு இல்லை; உலகில் நடப்பனவற்றை அவ்வப்போது அறிந்துகொள்ளும் வசதிகள் இல்லை. எனவே, கிராம மக்களிடம் நாகரிகம் முதிரவில்லை: பொருளைத் தேடிக்கொள்ளுதற்குரிய வழிகளை நாடிக்கொள்ள இயலவில்லை.

4. கிராமங்கள் செழிப்புறுதலன்றி, இந்தியா மேன்மை அடையாது. அதனால், கிராம முன்னேற்றத்திற்கு அடிகோல வேண்டும். தொழிலிலிருந்து ஓய்வு கொண்டு நகரங்களில் வசிக்கும் மக்கள், கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். நகரில் பல வசதிகளுடன் வாழ்ந்த அவர்கள் அங்கும் தங்களுக்கு வேண்டும் வசதிகளைச் செய்துகொள்ள முயல்வார்கள். அதனால், கிராம மக்களுக்கு நன்மைகள் உண்டாகும். நல்ல சாலைகள், நீர் நிலைகள், வீடுகள், தெருக்கள், சுகாதார வசதிகள், வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள், போக்கு வரவுக்குரிய சாதனங்கள், மின்சார விளக்குகள், வானொலி, தபால் முதலியன ஏற்படும். இவற்றால் கிராம மக்கள் முன்னேற்றமடைவார்கள்.

5. நகரங்களில் பெரிய கைத்தொழிற்சாலைகள் அமைவதுபோலக் கிராமங்களிலும் தொழில்கள் பலவற்றை மக்கள் மேற்கொண்டு நடத்தலாம். உழவுத்தொழில் ஆறு மாத காலமே. மக்கள் மற்றை ஆறு மாத காலத்தை வீணே சோம்பியிருந்து கழிக்காமல், வருவாயை அதிகப்படுத்தும் வழிகளைத் தேடலாம். கிராம மக்கள் ஓய்வு நேரங்களில் பொருள் வருவாயை உண்டாக்கிக்கொள்ளப் பல வழிகள் உண்டு. போக்கு வரவு வசதிகள் ஏற்படின், அவர்கள் பல

வகையில் முன்னேற்றமடையலாம். கோழிப் பண்ணை, பாற்பண்ணை, தேனீ வளர்த்தல் என்பவற்றால் அவர்கள் நல்ல ஊதியம் பெறலாம். முட்டை, பால், தயிர், வெண்ணெய், தேன் என்பவற்றை அடுத்துள்ள நகரங்களில் விற்றுப் பொருள் சம்பாதிக்கலாம். இரும்பு, செம்பு, பித்தளை, தகரம், ஈயம் என்னும் உலோகங்களால் பல பொருள்களைச் செய்து விற்கலாம்.

6. கிராமங்களில் பூந்தோட்டங்கள், காய்கறித் தோட்டங்கள் அமைத்துப் பூக்களையும் காய்கறிகளையும் உண்டாக்கி நகரங்களுக்கு அனுப்பலாம். கீற்று முடைதல், அகப்பை செய்தல், பாய் முடைதல், நூல் நூற்றல், பொத்தான் செய்தல், மரச் சாமான்கள் செய்தல், மண்ணாலும் மரத்தாலும் பொம்மைகள் செய்தல், கற்றாழை தென்னை காசினிச் செடி முதலானவற்றிலிருந்து நார் உரித்துக் கயிறு திரித்தல் முதலி-

யன செய்யலாம். கம்பளி, ஜமக்காளம், துப்பட்டி, துண்டு முதலான ஆடைகள், சரிகை வேலை முதலியன செய்யலாம்.



கிராமங்களில் பட்டுப் பூச்சிகளை உற்பத்தி செய்து, பட்டு நூல் தயாரிக்கலாம். எள், ஆமணக்கு, தேங்காய், இலுப்பை, வேர்க்கடலை இவற்றிலிருந்து நெய் தயாரித்து நகரங்களுக்கு அனுப்பலாம். பழங்கள், பால் முதலானவற்றைப் பக்குவமாகத் தகர டப்பிகளில் கை படாதமைத்து விற்கலாம்.

பருத்தி, இலவம்பஞ்சு இவற்றால் நூல்களும், ஆடைகளும், மெத்தை தலையணை முதலியனவும் செய்து விற்கலாம்.

7. கிராம மக்களிடம் ஒற்றுமையும், உழைப்பும், ஊக்கமும் இருக்குமாயின், அவர்கள் கிராமங்களிலிருந்து கொண்டே பல கைத்தொழில்களால் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளலாம்; சுகமாக வாழலாம்; செங்கல், ஓடு, மண்பாண்டங்கள் என்பவற்றைத் தயாரிக்கலாம். கிராமங்களில் இவற்றைச் செய்ய இட வசதியும் மூலப் பொருள்களும் உள்ளன அன்றோ? பெப்பர்மிண்டு, பிஸ்கோத்து, இனிப்புத் தின்பண்டங்கள், சோப்பு, சீப்பு முதலியவற்றையும், பிரஷ், ஏர், கலப்பை முதலிய மரச் சாமான்களையும், தோல் சாமான்களையும், கொம்புகளினால் செய்யக் கூடியவற்றையும் செய்யலாம். பூஞ்செடிகள், அழகிய இலையுடைய செடிகள் இவற்றை நாற்றுக்களாகச் சிறு பூந்தொட்டிகளில் அமைத்து, நகரில் கொணர்ந்து விற்கலாம். எண்ணிப் பார்த்தால், இவ்வாறு கிராம மக்களால் செய்யக் கூடிய கைத்தொழில்கள் மிகப் பல. கிராமங்களிலிருந்துதான் நெல், கோதுமை, துவரை, அவரை, கடலை, எள், மொச்சை முதலியன கிடைக்கின்றன. கைக்குற்றல் அரிசி மிகவும் சிறந்தது என்பதை யாவரும் அறிவர். ஆதலால், பலரைக்கொண்டு நெல்லைக் குற்றி அனுப்பலாம். சணலைக்கொண்டு கித்தான், கோணிப்பை முதலியன செய்யலாம். இவற்றால், கிராமங்களில் இருந்துகொண்டே பல தொழில்களையும் செய்யலாம் என்பது புலனாகின்றது.

8. கிராமங்களில் இவ்வளவு இருந்தும் மக்கள் எளியவர்களாய் இருக்கக் காரணம் என்ன? பணக்காரர்கள் அவர்களைத் தம் சகோதரர்கள் எனக் கருதிக் கவனித்து உதவி புரிவதில்லை. செல்வர்கள் தங்கள் முன்னேற்றத்தைக் கருதி நகரங்களில் வசிக்க வந்துவிடுகின்றார்கள்; கிராம மக்களுடன் இருந்து அவர்களுக்குப் பொருளாலும், நல்லறிவுரையாலும் உதவி செய்வதில்லை; அவர்கள் நல்வாழ்வே தம் வாழ்வு எனக் கருதுவதில்லை. இக்குறைபாடு நீங்கி, கிராம மக்கள் செல்வர்களின் உதவியையும் அறிவாளர் உதவிகளையும் பெற்றால், திண்ணமாக முன்னேற்றம் அடைவார்கள்.

87086

9. நகரத்தில் மக்களுக்குக் கிடைக்கும் வசதிகள் கிராம மக்களுக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்; சுகாதார வசதிகள் அளிக்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அவைகளின் மூலம் கிராம மக்களுக்குப் பொருளுதவி செய்து, அவர்கள் வருவாயை மிகுவித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். எல்லாவற்றிற்கும் முதற்காரணமாயுள்ள கல்வியைக் கிராம மக்களுக்கு அளிக்கப் பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். எண்ணும் எழுத்தும் கற்றுக்கொடுப்பதோடு தொழிற்கல்வியையும் கற்றுக்கொடுக்க வேண்டும். கிராம மக்கள் காலத்தை வீணாக்கக் கூடாது என்ற உணர்ச்சியைப் பெற வேண்டும். அவர்களுக்கு ஊக்கம், உற்சாகம், தொழில் முயற்சி என்பவற்றை ஊட்ட வேண்டும். கூட்டுறவு இயக்கத்தால் பணத்தைக் கொடுத்து, அவர்களுடைய வறுமையைப் போக்கி, வாழ்க்கையில் புத்துயிரும் புத்துணர்ச்சியும் கொள்ளுமாறு செய்யவேண்டும். இம்முறைகளை எல்லாக் கிராம மக்களும் ஒன்று சேர்ந்து ஆராய்ந்து செய்வார்களானால், அவர்கள் கிராமங்களிலேயே சிறந்த இன்பத்தைப் பெற்றுச் சிறக்க வாழலாம். அதனால், கைத்தொழில்கள் பெருகும்; இந்திய நாடும் செல்வத்தில் செழித்துச் சிறந்து விளங்கும். யாவற்றிற்கும் ஊக்கம், உழைப்பு, ஒற்றுமை, உண்மை, காலத்தை வீணாக்காமை முதலியன கிராம மக்களிடம் அமைதல் வேண்டும்.

அரும்பதம்: பொருள் காண்க:

விவசாயம்	இயலல்	சுகாதாரம்	சோம்பி
பெரும்பாலான	அலுவலகம்	பிணியாளர்	பண்ணை
சீர்	வசதி	முதிர்தல்	முடைதல்
தொகை	நீர் நிலை	நாடிக்கொள்ள	திரித்தல்
தயாரித்தல்	தலையணை	மெத்தை	மூலப்பொருள்
திண்ணம்	குறைபாடு	குற்றல்	வாழ்க்கைத் தரம்
மூலம்	அடி கோலல்	கூட்டுறவு	முன்னேற்றம்

சிறு விடை வினாக்கள்:

1. இந்தியாவின் உயிர் நாடி யாது?
2. கிராமங்கள் சீரழிந்து கிடக்கக் காரணமென்ன?

3. கிராம மக்கள் நகரங்களுக்குச் செல்வானேன் ?

4. கிராமங்களில் எவை இல்லை ?

5. கிராமங்கள் முன்னேற்றமடையச் செய்ய வேண்டுவன யாவை ?

6. கிராம மக்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளச் செய்யக் கூடிய கைத்தொழில்கள் எவை ?

7. கிராம மக்களிடம் அமைய வேண்டிய குணங்கள் யாவை ?

8. செல்வர்கள் கிராம மக்களுக்கு எவ்வாறு உதவலாம் ?

9. கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குரிய வழிகளைக் கூறுக.

10. கிராம மக்களிடம் நாகரிகம் முதிராமைக்குக் காரணம் என்ன ?

கட்டுரைப் பயிற்சி :

1. 'கிராம முன்னேற்றம்'—என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. 'குடிசைக் கைத்தொழில்கள்'—என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. குடிசைக் கைத்தொழில்களுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி விளக்கி எழுதுக.

பயிற்சி—I

1. பெரும்பாலான, தயாரித்தல், திண்ணம், அலுவலகம், வசதி, அடிகோலுதல், மூலம், நாடிக்கொள்ள, முன்னேற்றம்—இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

2. இந்நிலை ஏற்படக் காரணம் என்ன ?—இதனை என்ன வாக்கியம் என்று கூறுவாய் ?

இதனைப் போல மூன்று வாக்கியங்கள் இப்பாட சம்பந்தமாக எழுதுக. உதாரணம் :—கிராம மக்கள் ஏழைகளாயிருப்பானேன் ?

பயிற்சி—2

1. உனக்குத் தெரிந்த ஒரு கிராமத்தைப் பற்றி எழுதுக.

2. உனக்குத் தெரிந்த ஒரு நகரத்தைப்பற்றி எழுதுக.

3. நகர வாழ்க்கை—கிராம வாழ்க்கை—இவற்றில் எது சிறந்தது? காரணம் காட்டி விளக்குக.

பயிற்சி—3

1. செல்வர்—எதிர்ப்பதம் யாது?

2. காந்தியடிகள் கிராம முன்னேற்றம் பற்றி என்ன கூறுகிறார்? பிறரைக் கேட்டும், நூல்களைப் படித்தும் எழுதுக.

3. கிராமாதிகாரிகள், கிராமப் பஞ்சாயத்து என்பன பற்றிக் கேட்டும் படித்தும் அறிந்துகொண்டு எழுதுக.

4. கிராமச் சிறுவன் ஒருவனும், நகரச் சிறுவன் ஒருவனும் பேசிக்கொண்டால், எவ்வெவற்றைப் பற்றிப் பேசிக்கொள்வர் என்பதை மனத்தில் கருதிச் சம்பாஷணை முறையில் எழுதுக.

செய்யுட்பகுதி

I. வாழ்த்து

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பள்இங்கு வாரா(து) இடர்.

—கம்பர்

II. அறவுரை

1. நீதி வெண்பா

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 1

ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிரும்
கான அரியுகிரும் கற்றோரும்—மானே!
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்தஇடத் தன்றோ சிறப்பு? 2

2. நன்னெறி

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 1

முனிவினும் நல்குவர் மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்:—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான்; எட்டிபழுத்
தாயினும் ஆமோ? அறை. 2

—சிவப்பிரகாசர்

3. திரிகடுகம்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன் ;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான் ;
கோளாளன் என்பான் மறவாதான் ; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 1

கண்ணுக்(கு) அணிகலம் கண்ணோட்டம் ; காமுற்ற
பெண்ணுக்(கு) அணிகலம் நாணுடைமை ;—நண்ணும்
மறுமைக்(கு) அணிகலம் கல்வி ; இம் மூன்றும்
குறியுடையார் கண்ணே உள. 2

—நல்லாதனர்

4. நான்மணிக்கடிகை

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 1

கன்ருமை வேண்டுங் கடிய ; பிறர்செய்த
நன்றியை நன்ருக் கொளல்வேண்டும் ;—என்றும்
விடல்வேண்டும் தன்கண் வெகுளி ; அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை. 2

—விளம்பி நாகனர்

5. சிறுபஞ்சமூலம்

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்; நீள் கோடு
விலங்கிற்குக் கூற்றம் ; மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமாம் ; ஞெண்டிற்குத் தன்பார்ப்பு ;
நாவிற்கு நன்றல் வசை. 1

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளால் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 2

—காரியாசான்

6. அறநெறிச் சாரம்

காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே ;—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றாது ஆகும் ; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும். 1

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை ;—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். 2

— முனைப்பாடியார்

III. காதை

வேடன் கதை

வனமொன்றி லொருவேடன் வளர்குருவிக் கூட்டினொடும்
இனமொன்று வேட்டைக்கரு விகளுமெடுத் தேதிரியக்
கனமிருண்டு மழைபெய்யக் காற்றெழும்ப அவனடுங்கி
மனமருண்டோர் மரத்தின்கீழ் வந்திருந்தான் ; அப்போது 1

தங்குமதன் மேலிருந்த புறாவொன்று தன்பேட்டை,
'எங்ககன்ற தோவனத்தில் ! யாரேனும் பிடித்தாரோ !
மங்கியதோ!' எனப்புகல, அதுகேட்டு வனசரன்றன்
அங்கையுறு கூட்டிலுற்ற பெண்புறா அழுதுசொலும் : 2

'முன்வினையா லிதுபெற்றே னாயினும்நின் மனையடைந்த
இன்னவனுக் குபகாரம் புரி,' எனலும் எரிகொளுவி
அன்னவனை அழைத்துடலின் குளிர்போக்கி, 'ஆகாரம்
என்னைநீ அருந்(து),' என்று வீழ்ந்திறக்க, இவன்நோக்கி 3

'அன்பினால் நம்பொருட்டு வீழ்ந்தவிதை அருந்தியிடில்
துன்பம்வரும்,' எனப்பேட்டை விடுத்திடலும்; சூழ்ந்ததுவும்
தன்புருடன் பிரிவதனால் வீழ்ந்திறக்கத் தகுமிரண்டும்
இன்பமுறு தெய்வவுரு எய்திவா னுலகடைந்த. 4

இரக்கமொடு வேடுவனும் எரிவீழ்ந்து கதியடைந்தான் ;
தரைக்குளுளம் தளர்ந்துசர ணார்த்தியென்று சார்ந்தார்க்கும்
புரக்கவருள் செயின்தாமே பொன்றவரி னும்வருமென்
றுரைத்துப்போன் எச்சமிடும் பறவைகதை யோதுமால். 5

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தாண்டதேவர்

IV. பல்சுவை

1. தமிழ் வாணி

தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர
மொழிந்திடுதல், சிந்திப் பார்க்கே
களிவளர வுள்ளத்தில் ஆனந்தக்
கனவுபல காட்டல், கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதலிங் கிவையெல்லாம்
நீயருளும் தொழில்க ளன்றோ?
ஒளிவளரும் தமிழ்வாணி! அடியனேற்(கு)
இவையனைத்தும் உதவு வாயே.

—பாரதியார்

2. காந்தி

சொல்லுவதிங் கெல்லார்க்கும் சுலப மாகும்;
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்;
எல்லையின்றி நீதிகளை எழுது வார்கள்;
எழுதினது பிறருக்கே; தமக்கென் றெண்ணார்;
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
சொன்னதுபோல் செயல்முயன்றார் இவரைப் போல
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம்.

—நாமக்கல் கவிஞர்

3. தமிழ் நாடு

பண்ணை பெருத்த பழநாடு—சுற்றிப்
பார்த்திடக் கண்கள் குளிர்நாடு;
மண்ணையும் பொன்னாக மாற்றும்நாடு—கவி
வாணர் புகழும் தமிழ்நாடு; 1

தேவர் திருக்கோயில் ஓங்கும்நாடு—மேழிச்
செல்வர் பதிகள் சிறக்கும்நாடு;
மூவர் தமிழும் முழக்கும்நாடு—திரை
முத்தினை வீசிக் கொழிக்கும்நாடு. 2

—கவி மணி தேசிகவிநாயகம் பிள்ளை

4. தமிழிற்குப் பணி

தமிழின் பெருமைகளைப் பேசுவோம்—பழந்
தமிழிற் புதியவொளி வீசுவோம்;
தமிழர் ஒருகுலமாய் வாழுவோம்;—இளந்
தமிழர் தமிழ்விரதம் பூணுவோம். 1

புதிய தமிழுலகைத் தோற்றுவோம்;—புவி
புகழக் கலைத்திறமை கூட்டுவோம்;
முதிய நலங்களெல்லாம் போற்றுவோம்—இன்று
முளைக்கும் அருஞ்சுவைகள் கூட்டுவோம். 2

—யோகி சுத்தானந்த பாரதியார்

5. பாரத நாடு

மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியும் நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்டொழிலும் வாணிபமும் ஓங்கியசீர் நாடு
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு
கடவுளருட் கோவில்களே காட்சிஅளி நாடு
பலசமய உண்மையெல்லாம் பரந்தொளிரு நாடு
பழமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே.

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

6. தமிழ்க் கடவுள்

மண்ணுலகில் மொழிகள்பல மாண்டிடநாம் காண்போம்
வளமலிநூல் பலபடைத்தும் வாழ்ந்திலவம் மொழிகள்
எண்ணரிய வயதுமுதுக் குறைவறத்தால் முதியாள்
எழிலிளமை வளமிறவாக் கன்னிதமிழ்க் கடவுள். 1

நல்லதமிழ் நங்கைவளம் நாடுதும்நாம் நாடி
நானிலத்து மேன்மொழிகள் நல்குபல நலமும்
எல்லையறு மெழிலிளையாட் கணிந்துமகிழ்ந் தேத்தி
என்றுமிசை வளர்க்குவம்பல் லாண்டுநிதம் பாடி. 2

—நாவலர் S. சோமசுந்தர பாரதியார்

செய்யுட்பகுதி—குறிப்புரை

I. வாழ்த்து

1. இதனைப் பாடியவர், கம்பர். இவர் இயற்றிய வேறு நூல் இராமாயணம்.
   ஆய - உண்டாகிய, கலைகள் - சாத்திரங்கள் (கல்வி), ஏய -பொருந்த, தூய - பரிசுத்தமான, உரு பளிங்கு போல்வாள் - வடிவில் பளிங்கு போன்றவள் (கலைமகள்), இடர் - துன்பம்.

II. அறவுரை

1. நீதி வெண்பா :

   இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

   1. சின்னம்பட - உருவு அழியும்படி, நலிந்தாலும் - வருத்தப்படுத்தினாலும், நயந்து - விரும்பி.
   2. ஆனை - யானை, மருப்பு - கொம்பு (தந்தம்), அருங் கவரிமான் - அருமையான கவரிமான், கானம் - காடு, அரி உகிர் - சிங்கத்தின் நகம், செறிந்த இடம் - சேர்ந்த இடம்.

2. நன்னெறி :

   இதனை இயற்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் ஊர் துறைமங்கலம். இவர் வீரசைவர்; இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். நன்னெறி நாற்பது பாக்களை உடையது; நன்மையான வழிகளைப் பற்றிக் கூறுவது.

   1. தம் குறை - தங்கள் துன்பங்களை, தீர்வு உள்ளார் - நீக்கிக்கொள்ளுதலை நினைக்க மாட்டார்கள், பிறர்க்கு உறாஉம் - மற்றவர்கட்கு உண்டாகும், வெங்குறை - கொடிய துன்பத்தை, விழுமியோர் - மேலோர், திங்கள் - சந்திரன், சுறை இருள் - களங்கமாகிய இருட்டு, நிறை இருள் - நிறைந்த இருட்டு, மேல் நின்று - வானில் தோன்றி.

2. முனிவினும் - கோபித்திருப்பினும், நல்குவர் - கொடுப்பர், மூதறிஞர் - மிக்க அறிவினையுடையவர், உள்ளக் கனிவிலும் - மனச் சந்தோஷமாக இருந்த காலத்தும், கயவர் - கீழ் மக்கள், நனி வினைவு இல் - நல்ல விளைவு இல்லாத, காயினும் - காயாய் இருப்பினும், ஆகும் - உபயோகப்படும், கதலி - வாழை, அறை - சொல்.

3. திரிகடுகம் :

இந்நூலாசிரியர் நல்லாதனார். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஒவ்வொரு செய்யுளிலும் மூன்று மூன்று நீதிகள் கூறப்படுகின்றன. சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் சேர்ந்தது திரிகடுகம் என்பர் மருத்துவர். அது உடல் நோயை நீக்கி நலம் தரும். அது போல மூன்று நீதிகளை ஒவ்வொரு செய்யுளிலும் கொண்ட இந்நூல், அறியாமையைப் போக்கி அறிவுக்குப் பயன் தரும். இது போல மருந்தின் பெயர் கொண்ட நூல்கள் சிறுபஞ்ச மூலமும் ஏலாதியுமாகும்.

1. தாளாளன் - முயற்சியுடையவன், வேளாளன் - பிறர்க்கு உதவுபவன், விருந்து - புதியவன், கோளாளன் - பிறர் கூறும் நல்ல பொருள்களை மனத்தில் கொள்பவன், கேளாக - நட்பினராக.

2. அணிகலம் - நகை (ஆபரணம்), கண்ணோட்டம் - தாட்சணியம் (பழகியவர் கூறியதை மறுக்காதிருத்தல்), காமுற்ற - விரும்பிய, நாணுடைமை - வெட்கமுடைமை, நண்ணும் - பொருந்தும், மறுமை - மறு பிறப்பு, குறியுடையார் கண்ணே - இயற்கையான அறிவுடையவரிடத்திலேதான்.

4. நான்மணிக்கடிகை :

இதனை இயற்றியவர் விளம்பி நாகனார். இவரது ஊர் விளம்பி. ஒவ்வொரு செய்யுளும் நான்கு நீதிகளை உடையது. கடிகை - துண்டு, மணி - இரத்தினம். நான்கு இரத்தினத் துண்டுகள் போல நான்கு நீதிகளை

உடையது ஆதலின், நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

1. கல்லாமை - படியாமலிருத்தல், வளமிலாப் போழ்-தத்து - செல்வம் இல்லாத காலத்தில், வள்ளன்மை - பிறர்க்குத் தன்னிடமுள்ளதைக் கொடுத்தல், கிளைஞர் இல் போழ்து - சுற்றத்தார் இல்லாத காலத்தில், தமர் அல்லார் - தம்மிடம் உண்மை அன்புடையரல்லாதவர், ஊண் - உணவு (உண்ணுதல்).

2. கடிய-பிறர் கூறிய கொடுமையான சொற்களையும் செயல்-களையும் நோக்கி, கன்றாமை - மனம் புழுங்கிக் கோபிக்-காமலிருத்தல், நன்றியை - உபகாரத்தை, நன்றா - நல்லதாக, கொளல் வேண்டும் - மனத்தில் கொள்ள வேண்டும், என்றும்-எக்காலத்திலும், விடல் வேண்டும்-விட்டுவிடுதல் வேண்டும், தன்கண் - தன்னிடமுள்ள, வெகுளி - கோபம், ஆக்கம் - மேம்பாட்டை (செல்-வத்தை) சிதைக்கும் - அழிக்கும், வினை - செயலை, அடல் வேண்டும் - அழிக்க வேண்டும்.

5. சிறுபஞ்சமூலம் :

இந்நூல் மருந்தின் பெயர் கொண்டது. ஒவ்வொரு செய்யுளிலும் ஐந்து நீதிகள் கூறப்படும். இந்நூலை இயற்றியவர் காரியாசான்; சைனமதத்தினர். பதினெண்-கீழ்க்கணக்கு நூல்களுள் இதுவும் ஒன்று.

1. சிலம்பி - சிலந்தி, சினை - முட்டை, கூற்றம் - யமன், கோடு - கொம்பு, விலங்கு - மிருகம், வலம்படா - வலி-மையில்லாத, மா - கவரிமான், ஞெண்டு - நண்டு-பார்ப்பு - குஞ்சு, நா - நாக்கு, நன்று அல் வசை - நன்மை தருவதல்லாத பழிச்சொல்.

2. பிழைத்தல் - குற்றம் (தவறு) செய்தல், பெருமை - பெருங்குணமுடையவர் செயல், சிறுமை - அற்பகுண-முடையவர் செயல், இழைத்த தீங்கு - செய்த தீமையை, பகை கெட - பகைவர் இல்லாதபடி, நல்லார் - நற்குண முடையார், நகை கெட-இகழ்ந்து சிரித்தல் இல்லாதபடி.

6. அறநெறிச்சாரம் :

இது தரும வழிகளின் சத்தான பொருள்களைக் கூறுவது. இதனை இயற்றியவர் முனைப்பாடியார்.

1. காய்தல் - வெறுத்தல், உவத்தல் - மகிழ்தல், ஒரு பொருட்கண் - ஒரு பொருளினிடத்தில், ஆய்தல் - ஆராய்ந்து பார்த்தல், அறிவுடையார் கண்ணதே - அறிவுடையவரிடத்திலேதான் உண்டு, உற்ற குணம் - பொருந்திய நல்ல தன்மைகள், தோன்ருக் கெடும் - காணப்படாமல் மறைந்து போகும்.

கருத்து : 'ஒரு பொருளை ஆராயும் பொழுது விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆராய வேண்டும்,' என்பதாம்.

2. ஏமாப்பு - பாதுகாவல், மக்கட்பிறப்பு - மனிதப் பிறவி. கற்றல், கேட்டல், இரண்டின் வழி நின்றொழுகுதல் என்பவற்றை மேற்கொண்டால், மனிதப் பிறவியினும் சிறந்தது வேறு இல்லை. 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்.'

III. காதை

வேடன் கதை :

பஞ்சதந்திரம்-ஐந்து தந்திரங்கள். இந்நூலில் உள்ள கதைகள் கதைக்குள் கதையாக அமைவன. அவை அரச குமாரருக்கு அறிவுறுத்தக் கூறிய கதைகள் என்பர். இது வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதைத் தமிழில் செய்யுளாகப் பாடியவர் வீரமார்த்தாண்ட தேவர்.

ஐந்து தந்திரங்கள் அல்லது உபாயங்கள் என்பதைப் பஞ்ச தந்திரம் என்ருர். ஐந்து தந்திரங்களாவன :—

மித்திர பேதம்—நட்புப் பிரித்தல்
சுகிர்ல்லாபம்—நட்புப் பெறுதல்
சந்தி விக்கிரகப்—அடுத்துக் கெடுத்தல்
லப்த ஹானி—பொருளழிவு
அஸம்பிரேக்ஷ்ய காரித்துவம்—ஆராயாது செய்தல்

1. வனம் - காடு, இனம் ஒன்று - சாதிக்குப் பொருந்திய, கனம் - மேகம், மருண்டு - திகைத்து.

2. பேடு - பெண் பறவை, மங்கியதோ - இறந்ததோ, வன-சரன் - காட்டில் திரிபவனுன வேடன், அம் கை - அழகிய கை, உறு - பொருந்திய.

3. முன்வினை - முன்பிறவியில் செய்த பாவம், இன்னவன் - இவன், எரி கொளுவி - தீயை (உண்டாக்கி) மூட்டி, அருந்து - சாப்பிடு.

4. தெய்வ உரு - தேவர் வடிவம், வான் உலகு - தேவ லோகம், அடைந்த - அடைந்தன.

5. எரி - தீ, கதி - மோட்சம், தரை - பூமி, உளம்தளர்ந்து - மனம் சோர்ந்து, சரண் ஆர்த்தி - அடைக்கலம் (காப்பாற்று), சார்ந்தார் - அடைந்தவர், புரக்க - காப்பாற்ற, அருள் - கருணை, பொன்ற - இறக்க (அழிய), எச்சம் - மலம், ஓதும் - சொல்லும்.

IV. பல்சுவை

தமிழ் வாணி :

சிந்திப்பார் - நினைப்பவர், களி - மகிழ்ச்சி, ஒளி - பிரகா-சம், தமிழ் வாணி - தமிழ்க் கலைமகளே, அடியனேற்கு - அடிமையாகிய எனக்கு.

காந்தி :

சுலபம் - எளிது, சொற்பம் - குறைவு, தொல் உலகில் - பழைமையான (நீண்ட காலமாயுள்ள) இந்த உலகில், செயல் முயன்றூர் - செய்வதற்கு முயன்றவர், ஈந்த - அளித்த.

தமிழ் நாடு :

பண்ணை - வயல்கள் (உழவுத்தொழில்), கவி வாணர் - புலவர், மேழிச்செல்வர் - ஏரைக்கொண்டு செல்வம் தேடும் வேளாளர், பதிகள் - ஊர்கள், மூவர் தமிழ் - திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனுர் என்னும் மூவர் பாடிய தேவாரம், திரை - அலை, கொழிக்கும் - மிகுதியாக்கும்.

தமிழிற்குப் பணி :

ஒளி - பிரகாசம், கலைத்திறமை - வித்தையின் சாமர்த்-யம், முதிய - பழைமையான, நலம் - நன்மைகள், சுவைகள் - சுவையான நூல்கள், கூட்டுவோம் - சேர்ப்-போம்.

பாரத நாடு :

வானதி = வான் + நதி - கங்கை, மா - பெரிய, மல்கு - நிறைந்த, ஒண்டொழில் - (ஒள் + தொழில்) ஒளி பொருந்திய தொழில், வாணிபம் - வியாபாரம், கலைகள் - சாத்திரங்கள், மறைமுடி - வேதத்தின் உச்சியிலிருப்பவ-னை கடவுள், தவம் - மேன்மை, பல சமய உண்மை - பற்பல மதங்களின் உண்மைக் கருத்துக்கள், பரந்து - பரவி, பாரத நாடு - இந்திய நாடு.

தமிழ்க் கடவுள் :

மாண்டிட - இறக்க (மறைந்து போக), வளமலி - செழு-மை மிக்க, முதுக்குறைவு - பேரறிவு, அறம் - தருமம், முதியாள் - பழைமையானவள், எழில் - அழகு, இறவா - நீங்காத, நங்கை - பெண், தமிழ் நங்கை - தமிழ்த்தாய், நாடுதும் - தேடிச் செல்வோம், நானிலம் - பூமி (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலமுடை-யது), நல்கும் - அளிக்கும், எல்லை அறு - வரம்பில்லாத, இளையாட்கு - இளமையை உடையவளுக்கு, ஏத்தி - துதித்து, இசை - கீர்த்தி, நிதம் - தினந்தோறும், பல்-லாண்டு - பல ஆண்டுகள் வாழ்க எனப் பாடுதல்.

ஆசிரியர்களைப் பற்றிய குறிப்புக்கள் :

பல்சுவைப் பகுதியில் சி. சுப்பிரமணிய பாரதியார் நீங்கலாக மற்றையோர் இக்காலத்தில் வாழும் புலவர் பெருமக்கள் ஆவர்.

1. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை : சென்னை அர-சாங்க ஆஸ்தான வித்துவான்; தேசிய இயக்கத்தில் ஈடுபட்டவர். தமிழன் இதயம், என் சரித்திரம், அவனும் அவளும் முதலிய நூல்-களை இயற்றியுள்ளார்.

2. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை: பாடப் பகுதியில் காண்க.

3. யோகி சுத்தானந்த பாரதியார்: இவர் துறவியர்; செய்யுள் உரைநடை என்னும் இரு வகையிலும் பல நூல்களை இயற்றியுள்ளார்; தமிழிற்குப் பெருந்தொண்டு செய்பவர்.

4. திரு. வி. கலியாணசுந்தர முதலியார்: தமிழாசிரியராயும், பத்திரிகை ஆசிரியராயும் இருந்தவர்; தேசப்பணி, மொழிப்பணி என்பவற்றில் ஈடுபட்டவர்; செய்யுளிலும் உரைநடையிலும் பல நூல்கள் இயற்றியவர்; சிறந்த பேச்சாளர்.

5. S. சோமசுந்தர பாரதியார்: வழக்கறிஞர்; பசுமலையில் வாழ்பவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராய் இருந்தவர். மாரி வாயில், சேரர் தாயமுறை, திருவள்ளுவர் முதலிய நூல்கள் இயற்றியவர்; பேசுவதில் மிகவும் திறல் படைத்தவர்.

அகராதி

அ

அகிலமெல்லாம் - உலகமெல்லாம்
அடி கோலல் - துவக்கல், தொடங்கல்
அணிகலம் - ஆபரணம், நகை
அத்தர் - சந்தனத்தினின்று இறக்கப்படும் தைலப் பொருள்
அந்தப்புரம் - அரச குலப் பெண்கள் வசிக்குமிடம்
அந்தாதி - இறுதி முதலாக வருவது; ஒரு வகைப் பிரபந்தம்; 100 செய்யுட்களையுடையது
அபிடேகம் - நீராட்டுதல்
அபிமானம் - பற்று
அரங்கேற்றம் – சபையில் நூலை அங்கீகரிக்கச் செய்தல்
அரியணை - சிம்மாசனம்
அலுவலகம் - காரியாலயம்
அவமானம் - இழிவு
அவைக்களம் – சபை
அளவளாவுதல் - கலந்து பேசுதல்
அறவே - முற்றிலும்
அறிவியல் கலை - அறிவை வளர்க்கும் விஞ்ஞான சாத்திரம்
அஹிம்ஸை - பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை

ஆ

ஆசி - ஆசீர்வாதம், வாழ்த்து
ஆணை - கட்டளை
ஆதிக்கம் - அதிகாரம் செலுத்துதல்
ஆய்வது - ஆராய்வது
ஆராய்தல் - பரிசீலனை
ஆற்றல் - வலிமை
ஆன்றோர் - மேலோர்

இ

இமம் - பனி
இயங்குதல் - அசைதல், விளங்குதல்
இயலல் - ஆதல், முடிதல்
இலேசான - இலகுவான, கனமில்லாத
இழிவு - தாழ்ச்சி, கீழ்மை
இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது (அவசியம் வேண்டுவது)

உ

உபசரித்தல் - மரியாதை செய்தல்
உபதேசித்தல் - அறிவு புகட்டுதல்
உரிமை - சொந்தம்
உரியவை - தகுதியானவை
உலோகம் - இரும்பு, பொன், வெள்ளி போல்வன (பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுவன)

எ

எழில் - அழகு
எளிது - சுலபமானது

ஏ

ஏராளமாக - அதிகமாக
ஏற்றாற்போல - தகுந்தாற்போல
ஏற்றுமதி - பொருள்களை வெளிநாட்டுக்கு அனுப்புதல்

ஐ

ஐயம் திரிபு அற - சந்தேகம் விபரீதம் நீங்க

ஒ

ஒருகால் - ஒரு சமயம்
ஒறுத்தல் - தண்டித்தல்

க

கண்டம் - உலகப்பகுதி
கல் வெட்டு - கல்லில் பொறித்தல்
கலவை - பல பொருள்கள் கலந்திருத்தல்
கலைகள் - சாத்திரங்கள், நூல்கள்
கவிதை - செய்யுள், பாட்டு

கவிந்துகொளல் - மூடிக்கொள்ளுதல்
கவின் - அழகு
கனம் - மேகம், பெருமை, பாரம்
கனி — சுரங்கம், பழம்
கஷாயம் - மருந்துப் பானம்

கீ

கீர்த்தனை - இராகமும் தாளமும் பொருந்திய இசைப் பாட்டு

கு

குறைபாடு - தேவை, குறைகள்
குற்றல் - உலக்கையால் இடித்தல்
குறள் - குறுகிய தன்மை, ஒரு வகைப் பாட்டு

கூ

கூட்டுறவு - சேர்ந்து உறவு கொள்ளுதல், சேர்க்கை

கை

கைப்பற்றி - பிடித்துக்கொண்டு

ச

சம்ஸ்தானம் - சிற்றரசு (ஜமீன்)
சரிவு - மலைப்பக்கம்

சா

சாம்ராஜ்யம் - பெருநாடு
சால்வை - போர்வை (கம்பளி)

சீ

சீர் - பெருமை, சிறப்பு
சீற்றம் - கோபம்

சு

சுகாதாரம் - சுகத்திற்கு ஆதாரமானவை
சுந்தரம் - அழகு
சுற்றளவு — சுற்றி வரும் அளவு

சூ

சூறையாடல் - கொள்ளையடித்து வாரி இறைத்தல்

செ

செதுக்குதல் - வெட்டுதல்

சே

சேமித்து - சேர்த்து வைத்து, மீதிப்படுத்தி

சோ

சோம்பி - சோம்பலடைந்து

த

தட்பவெப்பம் - சீதமும் உஷ்ணமும்
தணிதல் - குறைவுபடுதல்
தயாரித்தல் - ஏற்பாடு செய்தல்
தலையணை - தலைக்கு வைத்துக் கொள்ளும் சிறு பஞ்சு மெத்தை
தவித்தல் - வருந்தல்

தா

தாதுப்பொருள் - உலோகங்களோடு கலந்துள்ள பொருள்

தி

திண்ணம் - நிச்சயம், உறுதி
திரித்தல் - முறுக்கேற்றல்

து

துரு - இரும்பு, பித்தளை, செம்பு இவை மட்கிப்போதல், களிம்பேறல்

தெ

தெய்வ வசம் — தெய்வத்தினிடம்

தே

தேற்றல் - தேறுதல் கூறுதல்

தொ

தொகை - பொருளின் தொகுதி
தொடுப்பது - கோப்பது
தொழிற்சாலை - தொழில் செய்யும் இடம்
தொன்மை - பழைமை

நா

நாகரிகம் - வாழ்க்கை மேம்பாடு
நாடிக்கொள்ள - தேடிக்கொள்ள
நாணயம் - பணம்

நி

நியமித்தனர் - ஏற்படுத்தினர்

நீ

நீர் நிலை - நீர் தங்கும் இடம், ஏரி, குளம், குட்டை

நீர் வீழ்ச்சி - ஆற்று நீர் உயரத்திலிருந்து விழுவது

நு

நுண்கலைஞர் - நுட்பமாகச் சாத்திரங்களை ஆராய்பவர்

நுண்ணிய - மிக மென்மையான

நெ

நெகிழ்ச்சி - தளருதல், துவளுதல்

ப

படுகை - ஆற்றோரம்

பண்ணை - வயல்

பணிவு - வணக்கம், அடக்கம்

பற்று - விருப்பம், அன்பு

பா

பாலங்கள் - வாராவதிகள்

பி

பிணியாளர் - நோயாளிகள்

பிரபந்தம் - சிறு நூல்கள்

பூ

பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்கள்

87086

பெ

பெரும்பாலார் - மிகுதியானவர்

பெரும்பாலான - மிகுதியான

பொ

பொருவது - சண்டை செய்வது

பொலிந்து - விளங்கி

பொறித்தல் - கல்லில் எழுத்து உருவங்களைத் தீட்டல்

போ

போதனு முறை - பாடம் கற்பிக்கும் முறை

ம

மணம் - வாசனை, கலியாணம்

மணி முடி - இரத்தினக் கிரீடம்

மலர்தலை - அகன்ற இடம்

மா

மானம் - தன் நிலையில் தாழாமையும், தாழ்வு வந்தால் உயிர் வாழாமையும் ஆகிய குணம்

மு

முடைதல் - பின்னல்

முதிர்தல் - முற்றுதல்

முற்றுகை - பகையரசன் கோட்டையை வளைத்துக்கொள்ளுதல்

முன்னேற்றம் - மேலோங்குதல், நிலையில் முன் ஏறுதல்

மூ

மூலம் - வழி, முதல், அடிப்படை

மூலப் பொருள் - முதற்பொருள்

மெ

மெத்தை - படுத்தற்குப் பஞ்சினுல் ஆக்கப்படும் படுக்கை

வ

வசதி - சௌகரியம்

வணக்கி - பணியச் செய்து

வனப்பு - அழகு

வமிசம் - குடும்பம்

வரம்பு - எல்லை

வருமானம், வருவாய் - வரும்படி, சம்பாத்தியம்

வயிரம் - நவமணிகளுள் ஒன்று, மரங்களின் உட்புறம் உறுதி பெற்றிருத்தல்

வா

வாக்கு - சொல்

வாணிகம் - வியாபாரம்

வாழ்க்கைத் தரம் - வாழ்க்கையின் தன்மை

வி

வித்தியாசம் - வேற்றுமை, பேதம்

வியத்தல் - ஆச்சரியப்படுதல்

விவசாயம் - பயிர்த்தொழில்

வெ

வெகுளி - கோபம்

வெறுப்பு - மனம் பற்றுமை

UMA VACHAKAM

TAMIL

BOOK VI—INTENSIVE STUDY

FOR FORM I

By Vidwan R. S. SAMBASIVA SARMA

UMADEVAN & COMPANY
16, SEMBUDOSS ST., MADRAS-1.
1951

[Price As. 8

Copyright]